பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆவணி 02 சனிக்கிழமை 18.08.2018 | கதிர் 286

**இனிது ரகசியம் அல்ல!**

இந்தியப் பிரதமராக இருந்த அடல் பிஹாரி வாஜ்பாய் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். இந்தச் சமயத்தில் அவரைப் பற்றி எண்ணிப் பார்ப்பது, அவருக்கு உண்மையான அஞ்சலியைச் செலுத்துவது ஈழத் தமிழர்களின் கடமை என்று நினைக்கின்றேன்.

தமிழகத்தில் பக்கம் 08

# முன்னாள் ஆளுநர் பளிகக்கார பதவி விலக விக்கியே காரணம்

## உண்மையைப் போட்டுடைக்கிறார் தவராசா





யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 18

திரும்பத் திரும்ப உரைப்பதன் மூலம் முதலமைச்சர் பொய்யை உண்மையாக்க முயல்கின்றாரா? எனக் கேள்வி எழுப்பியுள்ள வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா, முதலமைச்சர் முன்னாள் ஆளுநர் பளிகக்காரவுக்கு அனுப்பிய கடிதமொன்று மிகக் காரசாரமாக எழுதப்பட்டது மட்டுமல்லாமல், அதில் கடுமையான வார்த்தைப் பிரயோகமும் அமைந்திருந்தது. இதனால் மிகவும் வேதனையடைந்த பளிகக்கார தனது பதவியிலிருந்து விலகினார் என்றும் குறிப்பிட்டுள்ளார். பக்கம் 14

## தெல்லிப்பழையில் 4.7 ஏக்கர் காணி ஓக. 21 விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.18

வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் தெல்லிப்பழையில் 4.7 ஏக்கர் காணி விடுவிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவப் பேச்சாளர் அலுவலகம் இதனைத் தெரிவித் பக்கம் 14

## கீத் நொயர் மீதான தாக்குதல்: எனக்கு எதுவும் நினைவில்லை

**விசாரணையின் பின்னர் கூறினார் மஹிந்த**



கொழும்பு, ஓக.18

ஊடகவியலாளர் கீத் நொயர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தமக்கு எதுவும் நினைவில்லை என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டுக் கொடூரமாகத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நேற்று பக்கம் 14

## இலங்கை வருகிறார் ஜப்பானிய அமைச்சர்



கொழும்பு, ஓக.18

ஜப்பானியப் பாதுகாப்பு அமைச்சர் இட்சுனோரி ஒனோடெரா அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

எதிர்வரும் 20ஆம் திகதி இலங்கை வருகை தரவுள்ள அவர், பக்கம் 14

## முகாமைத்துவ உதவியாளர்களாக வடக்கில் 110 பேருக்கு நியமனம்



யாழ்ப்பாணம், ஓக.18

வடக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர் தரம் 3 இற்கான நியமனங்கள் கைதடியிலுள்ள பக்கம் 03

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகம் படையினரால் உடைப்பு



முல்லைத்தீவு, ஓக.18

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகம் படையினரால் உடைக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் பக்கம் 14

## மஹிந்தவிடம் வாக்குமூலம் பெற்றமைக்கு கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஓக.18

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் வாக்குமூலம் பெற்றமைக்கு மினுவாங்கொட பிரதேச சபையின் தாமரை மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் கறுப்புப் பட்டி அணிந்து எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். பக்கம் 14

## மஹிந்த மீது சேறு பூசவே சி.ஐ.டியினர் விசாரணை

**சீறுகின்றார் ஜி.எல். பீரிஸ்**

கொழும்பு, ஓக.18

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவு இரண்டரை மணி நேரம் விசாரணை பக்கம் 14

## எல்லை நிர்ணய அறிக்கை ஓக.24 இல் சபைக்கு வரும்

கொழும்பு, ஓக.18

மாகாண சபைகள் தேர்தலை, புதிய முறைமையின் கீழ் நடத்துவதற்குத் தேவையான தொகுதிகளைப் பிரிக்கும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை, எதிர்வரும் 24ஆம் திகதி நாடாளுமன் பக்கம் 14

## நல்லூர் ஆலய வெளிவீதியில் கற்பூரம் விற்பதற்கும் தடை

**யாழ். மாநகர சபை அறிவிப்பு**

யாழ்ப்பாணம், ஓக.18

நல்லூர் ஆலயத்தால் சீலை அமைக்கப்பட்ட பகுதிக்குள் கற்பூரம் விற்பனை செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை பக்கம் 03

## செப்ரெம்பர் ஐந்தில் அரசு ஆட்டம் காணும்

**கூறுகிறார் தினேஷ் குணவர்தன**

கொழும்பு, ஓக.18

அரசுக்கு எதிராக மக்கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஐந்தாம் திகதி கொழும்பில் திரண்டு தமது எதிர்ப்பைத் தெரிவிக்கவுள்ளனர். எனவே அத்துடன் அரசு ஆட்டம் காண்பதுடன் பக்கம் 14

## அரசியல்வாதிகளின் அச்சுறுத்தலுக்கு வடக்கு அதிகாரிகள் பணியவேகூடாது

**முதலமைச்சர் விக்கி**



யாழ்ப்பாணம், ஓக.18

அரசியல்வாதிகளின் அச்சுறுத்தல்களுக்கு வடக்கு அதிகாரிகள் அடிபணியக்கூடாது என வடக்கு பக்கம் 03

## நல்லூரில் பொலித்தீன் முற்றுமுழுதாகத் தடை

**பதிலாக உக்கக்கூடிய பைகள் அறிமுகம்**

யாழ்ப்பாணம், ஓக.18

நல்லூர் ஆலயச் சூழலில் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பொலித்தீனுக்கு பக்கம் 14

காலைக்கதிர் Kalaikkathir


# ஜனநாயகத்தை நிலைநாட்டி, மக்கள் நிம்மதியாக மூச்சுவிடக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது



## பிரதமர் ரணில் தெரிவிப்பு

**கொழும்பு, ஓகஸ்ட் 18**

**நாட்டிற்குள் ஜனநாயகத்தை நிலைநாட்டி, மக்கள் நிம்மதியாக மூச்சுவிடக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

**நாடெங்கிலும் 10 லட்சம் காணி உறுதிகளை வழங்கும் தேசிய திட்டத்தின் கீழ் நேற்றுமுன் தினம் இரத்தினபுரி மாவட்டத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையிலேயே பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.**

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இந்த மூன்று ஆண்டுகள் இலகுவானவை அல்ல. இவற்றின் பலாபலன்கள் படிப்படியாக கிடைத்து வருகின்றன.

முதலில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டது. அடுத்து சட்டவாட்சியும், நாடாளுமன்ற மேலாண்மையும் உறுதி செய்யப்பட்டது. தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டம் நிறைவேற்றப்பட்டது.

காணாமற்போனோருக்கான அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டது. இன்று முழுமையான ஜனநாயகத்தை உருவாக்குவதற்கான பொறிமுறை அமுலில் உள்ளது.

2020 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த படுகடனை மொத்த தேசிய உற்பத்தியில் 70 சதவீதமாக குறைப்பது அரசாங்கத்தின் திட்டமாகும். இந்தக் கடன்களை எதிர்காலச் சந்ததிக்கு விட்டு வைக்கப் போவதில்லை என அவர் கூறினார்.

மூச்சுவிட்ட மூன்றாண்டுகள் என்ற பெயரில் எதிர்வரும் 21 ஆம் திகதி பிரதமர் தலைமையில் பல அபிவிருத்தித் திட்டங்கள் மக்கள் பாவனைக்கு ஒப்படைக்கப்படவுள்ளன.

குடியிருப்பு வசதிகள் இல்லாத மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொள்ளும் வேலைத்திட்டத்தின் கீழ் பூண்டுலோயா டன்சினன் தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட 404 குடியிருப்புமனைகள் தொழிலாளர்குடும்பங்களுக்கு கையளிக்கப்பட்டன.

அத்துடன், ஆயிரத்து 550 கோடி ரூபா செலவில் குருநாகல் நகரில் நிர்மாணிக்கப்பட்ட குடிதண்ணீர் மற்றும் மலசலகூடதிட்டத்தையும் பிரதமர் திறந்து வைத்தார்.

நாடெங்கிலும் 10 லட்சம் காணி உறுதிகளை வழங்கும் தேசிய திட்டத்தின் கீழ் நேற்று 4 ஆயிரம் பேருக்கு உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. இன்று சியம்பலாண்டுவ பிரதேசத்தில் ஆயிரம் உறுதிகள் வழங்கப்படும்.

அடுத்தடுத்த நாள்களில் ஏனைய மாவட்டங்களில் காணி உறுதிகள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் திங்கட்கிழமை நான்காயிரத்திற்கு மேற்பட்ட பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்ளும் வகையில் பிரதமர் தலைமையில் நியமனக் கடிதங்கள் கையளிக்கப்படவுள்ளன. இது தொடர்பான வைபவம் அலரி மாளிகையில் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வவுனியா பேராறு குடிதண்ணீர்த் திட்டத்தை பார்வையிட்டார் அமைச்சர் ரவூவ் ஹக்கீம்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் மூலம் பேராறு குடிதண்ணீர்திட்டத்திற்கும் வேறு திட்டங்களுக்குமாக சுமார் 580 கோடி ரூபா நிதியில் ஆரம்பிக்கப்பட்ட பேராறு குடிநீர் திட்டம் முடிவுறும் நகர திட்டமிடல் மற்றும் நிலையில் அதனை தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைப்பு அமைச்சர் ரவூப்ஹக்கீம் நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார்.

வடமாகாணத்திலே பெரும் குடிதண்ணீர் வழங்கும் திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட பேராறு குடிதண்ணீர் திட்டமானது நடைமுறைப்படுத்தப்படுகிறது. இப் பிரதேசத்தின் விவசயிகளின் வேண்டுகோளுக்கமைய இவ் நீர்தேக்கதில் இருந்து செல்லும் மேலதிகமான நீரை 15 க்கும் மேற்பட்ட குளங்களில் நீர் செல்லக்கூடிய வகையில் கலிங்கு அமைத்து கொடுப்பதற்க்கும் இதன் போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதனால் பல விவசாயக் குடும்பங்கள் இரண்டு போகம் நெற்பயியர்ச் செய்கை செய்யக்கூடிய வாய்ப்புக்கிட்டியுள்ளது. அத்துடன், இப் பிரதேச மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்குவதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சருடன் வன்னிப் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வட மாகாண சபை உறுப்பினர் எஸ்.எச்.எம். நியாஸ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹுனைஸ் பாருக், முத்தலிப் பாவா பாருக், பிரதேச சபை உறுப்பினர் மாஹிர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் வட மாகாண பொது முகாமையாளர் பாரதிதாசன் உள்ளிட்ட பலரும் நேரில் சென்று பார்வையிட்டனர். (க-100)

# சுயாதீன ஆணைக்குழுக்களை ஸ்தாபித்தமை மக்களுக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும்

## பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதான தெரிவிப்பு

சுயாதீன ஆணைக்குழுக்களை ஸ்தாபித்தமை மக்களுக்குக் கிடைத்த வெகு வெற்றியாகும் என்று பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதான தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

கடந்த அரசின் ஆட்சியில் நீதித்துறையின் சுதந்திரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டது.

அதிகாரத்திற்கு பயந்து நீதி மன்றத்தின் தீர்ப்புக்கள் மாற்றப்பட்டமையை மக்கள் மறந்துவிடவில்லை. இவ்வாறான நிலையை மாற்றி, தற்போதைய அரசு ஜனநாயகத்தை நாட்டில் ஏற்படுத்தியுள்ளது.

அரச ஊழியர்களுக்கு தற்போதைய அரசைப் போன்று எந்தவொரு அரசும் சலுகைகளை வழங்கவில்லை.

அரச ஊழியர்களின் சம்பளம் பல தடவைகள் அதிகரிக்கப்பட்டதோடு, உழைக்கும் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு என்றும் தயார் நிலையில் இருக்கிறது.

வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டம் என்பனவற்றை அரசு ஒருபோதும் ஒடுக்குவதில்லை. வேலைநிறுத்தங்களில் ஈடுபடுபவர்கள் மக்களுக்கு சிரமம் ஏற்படாத வகையில் தமது கோரிக்கைகளை வென்றெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதி அமைச்சர் பரண விதான வலியுறுத்தியுள்ளார்.

# முரண்பட்ட நேர அட்டவணைகள்: பரீட்சார்த்திகளுக்கு நிவாரணம்!

நேர அட்டவணையை சரியான முறையில் கவனத் தில் கொள்ளாததால் இம்முறை உயர்தர பரீட்சையில் சில பாடங்களுக்கு தோற்ற முடியாதுபோன பரீட்சார்த்திகளுக்கு ஏதேனும் நிவாரணம் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சார்த்திகளுக்கு இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவதற்கு முரண்பட்ட நேர அட்டவணை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணைய தளத்தில் வெளியிடப்பட்டமையே காரணமாகும்.

இருப்பினும் , சரியான நேர அட்டவணையை உள்ளடக்கிய பரீட்சைக்கான அனுமதி அட்டை அனைத்து பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. இந்த நேர அட்டவணையை பரிசீலனை செய்தால் இவ்வாறான சிக்கல் ஏற்பட்டிருக்காது என்று பரீட்சைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இருப்பினும், மனிதாபிமான அடிப்படையில் பரீட்சார்த்திகளுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் சனத் பூஜித்த தெரிவித்துள்ளார். சிரமங்களுக்கு உள்ளான பரீட்சார்த்திகள் எதிர்பார்க்கும் நிவாரணம் தொடர்பிலான விடயங்கள் தற்பொழுது திரட்டப்பட் டுள்ளன என பரீட்சையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டு நேர அட்ட வணைகள் பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்ட தவறு தொடர்பாக உடனடியாக கண்டறியப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# நல்லாட்சி அரசில் வெள்ளை வான் ஆள்கடத்தலுக்கு முற்றுப்புள்ளி!

## அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவிப்பு



கொழும்பு, ஓக.18

சமகால நல்லாட்சி அரசில் நாட்டில் அனைவருக்கும் சட்டம் பொதுவான வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக சுயாதீன நீதிமன்றம் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு போன்ற ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு ஜனநாயகம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது என அரச நிர்வாக முகாமைத்துவ மற்றும் சட்ட ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

சமகால நல்லாட்சி அரசுக்கு ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதியான நேற்றுடன் 3 வருட காலம் நிறைவடைவதை முன்னிட்டு அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார கருத்து தெரிவித்தார்.

அப்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இந்த 3 வருட காலப்பகுதியில் அரசு மக்களுக்கான பெரும் பணிகளை முன்னெடுத்துள்ளது. சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான விடயங்களில் நாட்டில் அனைவருக்கும் சட்டம் பொதுவான வகையில் நியாயமான முறையில் முன்னெடுக்க முடிந்துள்ளது.

இதற்காக சுயாதீன ஆணைக்குழுக்கள் பல நியமிக்கப்பட்டுள்ள. இவ்வாறான 11 ஆணைக்குழுக்கள் மூலம் நாட்டின் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது.

இன்று வெள்ளை வான்கள் மூலம் ஆட்கள் கடத்தப்படுவதில்லை. கொலை சம்பவங்களும் குறைந்துள்ளன. கொள்ளைச் சம்பவங்களும் குறைவடைந்துள்ளன. பெண்கள் தொடர்பிலான துஷ்பிரயோகங்கள் குறைவடைந்துள்ளன. நாட்டு மக்களினால் நிம்மதியாக வாழக்கூடிய சிறந்த சூழ்நிலை உருவாக்கப்பட்டுளது. குற்றச்செயல்கள் குறைவடைந்துள்ளன போதைப்பொருட்கள் கடத்தப்படுவதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தை பொறுத்தவரையில் அரச ஊழியர்களின் சம்பளம் ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று கொடுப்பனவு தொகையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நெல்லுக்கான விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. சோளத்துக்கான விளையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. தேயிலை கொழுந்தின் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த அமைச்சர் முன்னாள் ராஜபக்ஷவின் அரசிலும் பார்க்க தற்போது பொருள்களின் விலைகளும் குறைவடைந்துள்ளன.

நெடுஞ்சாலைகளில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி குறித்து கருத்து தெரிவித்த அவர் கண்டி அதிவேக நெடுஞ்சாலை, அம்பாந்தோட்டை வரையிலான நெடுஞ்சாலைகள் வரை அமைக்கப்பட்டுள்ளன.

அடுத்த வருடத்தில் 7.5 பில்லியன் ரூபா செலவில் நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அரசியல் கலப்பில்லாமல் விசாரணைகள் வேண்டும்

## நாமல் ராஜபக்ஷ கோரிக்கை

கொழும்பு, ஓக.18

அரசியல் கலப்பு இல்லாமல் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் கீத்நொயார் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதியிடம் நேற்றுக் குற்றப்புலனாய்வு பிரிவினர் மூன்று மணித்தியாலங்கள் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட கூட்டு எதிரணியின் உறுப்பினர்கள் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே நாமல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்–

நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்ததில் இருந்து இதனையே செய்து வருகின்றது. இன்று நாட்டில் கொலைகள் பரவலாக இடம்பெறுகின்றன.

ஆனால் அது குறித்து கரிசனையின்றி. இவ்வாறு குற்றப் புலனாய்வு அதிகாரிகள் நேரத்தை வீணடித்து விசாரணைகளை நடத்துகின்றனர். ஆனாலும் நாம் சட்டத்தை மதிக்கின்றோம்.

நீதிமன்றத்தில் எம்மை நிரூபிக்க நாம் நடவடிக்கை எடுப்போம். மஹிந்த ஒரு நிறைவேற்றதிகார ஜனாதிபதியாவார். அவ்வாறு இருந்தும் இன்று விசாரணைகளுக்கு முகம்கொடுக்கின்றார்.

நாட்டு மக்களின் பிரச்சினைகளை மழுங்கடிக்க இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். எனவே இவற்றுக்கு எதிராக செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி பாரிய போராட்டத்தை முன்னெடுப்போம்.

இவ்வாறு விசாரணைகளை முன்னெடுப்பதில் பிரச்சினையில்லை. ஆனால் அது அரசியல் கலப்பு இல்லாமல் மேற்கொள்ளப்பட வேண்டும் – என்றார். (ஐ)

# கிழக்கு ஆளுநரை சந்தித்தார் சம்பந்தன்



எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனுக்கும், கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகமவுக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு நேற்று நண்பகல் 12 மணிக்கு திருகோணமலையில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் இல்லத்தில் இடம்பெற்றது.

இரண்டு மணி நேரத்திற்கும் அதிகமாக நடைபெற்ற இந்தச் சந்திப்பில், கிழக்கு மாகாணத்தின் பல்வேறு அபிவிருத்திகள், முன்னேற்றங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் –

மிகவும் பயனுள்ள வகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதன்போது இளைஞர்களின் வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் பேசியிருந்தோம்.

அத்துடன், விவசாயம், தெருக்கள், குளங்கள் என்பவற்றின் அபிவிருத்திகள் தொடர்பிலும் நாம் இதன்போது பேசியிருந்தோம் – என்றார். (ஐ)

# தமிழினம் உரிமையுடன் வாழ்வதில் அக்கறை கொண்டிருந்தவர் வாஜ்பாய்

## இரங்கல் செய்தியில் சிறிகாந்தா

கொழும்பு, ஓக 18

தமிழினம் சம உரிமையுடன் வாழ வேண்டும் என்பதில் வாஜ்பாய் என்றும் அக்கறை கொண்டிருந்தார்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ரெலோ செயலாளர் நாயகம் என்.சிறிகாந்தா.

வாஜ்பாயின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள இரங்கலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

அடல் பிஹாரி வாஜ்பாய் இந்தியப் பிரதமராகப் பதவி வகித்த 1998 – 2004 கால கட்டத்தில் இலங்கையின் உள்நாட்டுப் போரில் இலங்கை அரசுக்கு ஆயுத உதவியும் ஆயுத விற்பனையும் அறவே இல்லை என்ற நிலைப்பாட்டை உறுதியுடன் முடிவு கடைப்பிடித்தவர்.

இலங்கையின் ஒருமைப்பாட்டுக்குள் தமிழினம் சம உரிமையுடன் வாழ வேண்டும் என்பதில் அவர் என்றும் அக்கறை கொண்டிருந்தார்.

1986 சித்திரை மாதத்தில் எமது இயக்கத்தின் சார்பில், புதுடில்லியில் அவரை சந்தித்த போது தனது நிலைப்பாட்டை தெளிவாகவும் திட்டவட்டமாகவும் அவர் வெளிப்படுத்தினார்.

அடுத்து வந்த சில தினங்களில் மதுரையில் நிகழ்ந்த தமிழ் ஈழ ஆதரவு அமைப்பின் (ரெசோ) மாநாட்டிலும் பல இந்திய அரசியல் தலைவர்களோடு அவரும் கலந்து கொண்டு உரையாற்றினார்.

சர்வதேச அரசியல் விவகாரங்களில் ஆழ்ந்த அறிவு கொண்டிருந்த அவர் ஒரு மாபெரும் தலைவர்.

தனது சொல் ஆற்றலால் கோடிக்கணக்கான இந்திய மக்களை வசீகரித்தவர்; அற்புதமான கவிஞர்; உயர்ந்த ஜனநாயகவாதி என்றெல்லாம் பாராட்டப்பட்டு வந்திருக்கும் அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களுக்கு எமது அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்–என்றுள்ளது.

## முகாமைத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண சபைக் கேட்போர் கூடத்தில் வைத்து நேற்று வழங்கப்பட்டன.

வடக்கு மாகாணத் திணைக்களங்களில் நிலவிய வெற்றிடங்களுக்காக இடம்பெற்ற பரீட்சையில் சித்தியடைந்த 110 பேருக்கே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் அ. பத்திநாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடமாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோர் நியமனங்களை வழங்கினர். (ஐ-7)

## நல்லூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளது.

அத்துடன், நல்லூர் ஆலய சூழலில் யாழ். மாநகர சபையால் அனுமதிக்கப்பட்ட கடைகள் தவிர்ந்த, ஏனைய நடைபாதை வியாபாரங்கள் தடை செய்யப்பட்டுள்ளன என மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் நேற்று இடம்பெற்ற சிறப்புக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ். மாநகர சபை உறுப்பினர் வரதராசா பார்த்திபன் தெரிவித்தவை வருமாறு –

நல்லூர்க் கந்தனின் பெருந் திருவிழாக் காலத்தில் சீலை கட்டப்பட்டுள்ள பகுதிக்குள் எந்தவொரு வியாபார நடவடிக்கையும் மேற்கொள்ள அனுமதிக்கப்படாது. கற்பூரம் விற்பனை செய்வது கூடத் தடை செய்யப்படும் எனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வீதிகளுக்கு இடையே நின்று நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடுகின்ற அத்தனை பேரும் திருப்பி அனுப்பப்படுவர் என்றும் கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டது.

அத்துடன், நல்லூர் ஆலயத்தின் வடக்கு வீதியில் (குபேர வாசல் பக்கம் – கோயில் வீதியின் முடமாவடி செல்லும் பக்கம்) எந்தவொரு கடையும் அமைக்கப்படாது. தற்போது, அமைக்கப்பட்டுள்ள அனைத்துக் கடைகளும் அகற்றப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையால் நேற்று எட்டப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு அமைய அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் 5 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொண்ட பொலிஸ் குழு அமைக்கப்படும். அந்தக் குழு யாழ். மாநகர சபையிலிருந்து தனது பணியை முன்னெடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

முறைகேடுகள் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் இந்த சிறப்புப் பொலிஸ் குழு விசாரணை நடத்தும். அத்துடன், அனுமதி பெறப்படாத கடைகளை அகற்றும் பணியையும் இந்தப் பொலிஸ் குழு முன்னெடுக்கும் – என்றார். (ஐ-7)

# சிங்களவரின் கடை உடைத்து பணமும் நகைகளும் திருட்டு

கொக்குளாய் முகத்துவாரம் பகுதியில் குடியிருக்கும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களின் கடை ஒன்று



கடந்த 16 ஆம் அன்று இரவு உடைத்து பெருமளவான நகைகள் திருடப்பட்டுள்ளன எனக் கொக்குளாய் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

கொக்குளாய் முகத்துவாரத்தில் வசித்து வரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் வீட்டுடன் கடை ஒன்றை நடத்தி வந்துள்ளார்கள்.

இவர்களின் கடை கடந்த 16 ஆம் திகதி இரவு உடைக்கப்பட்டு நகைகள் மற்றும் பணம் திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் இருந்து தடயவியல் பொலிஸார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பெருங் குற்றப்பிரிவுப் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று தேடுதல் மற்றும் விசாரணைகள் மேற்கொண்டபோது திருடன் கடையில் பல இடங்களில் கறிதூளினைத் தூவிவிட்டுச் சென்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதன்படி அந்த கடையின் உரிமையாளரிடம் இருந்து நான்கு இலட்சம் ரூபா பணமும், ஒன்றரை பவுண் நகையும் திருடப்பட்டுள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

## அரசியல்வாதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கான 110 முகாமைத்துவ உதவியாளர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு கைதடியில் உள்ள உள்ளூராட்சி அமைச்சின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே முதலமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசியல்வாதிகள் மற்றும் பிற சக்திகளின் ஊடான அழுத்தங்களின் மூலம் உங்களுக்குப் பாரிய சவால்கள் ஏற்படுத்தப்படக் கூடும். சட்டத்திற்குப் புறம்பாகச் செயற்பட வலியுறுத்தப்படக் கூடும். இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாது சட்ட ரீதியாகச் செயற்பட வேண்டும்.

மக்களுக்காக சேவை செய்கின்றோம் என்பதை ஒருபோதும் மறந்து விடக்கூடாது. எமது வட மாகாண சபை மக்களுக்கு எதனை வழங்க எண்ணியிருக்கின்றதோ அதனை நடைமுறைப்படுத்துவது அரச அதிகாரிகளின் பொறுப்பாகும் – என்றார். (ஐ)

# சட்டத்தை தமக்கு ஏற்றவாறு வளைக்கின்றது நல்லாட்சி

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.18

அரசு சட்டத்தை தமக்கு ஏற்றவாறு வளைக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதியிடம் நேற்று குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மூன்று மணித்தியாலங்கள் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது நாமல் உள்ளிட்ட கூட்டு எதிரணியின் உறுப்பினர்கள் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே விமல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை வரலாற்றில் பாரிய மோசடியாக மத்திய வங்கியின் முறிகள் மோசடி கருதப்படுகின்றது.

அதனுடன் சம்பந்தப்பட்ட பிரதான திருடர் சிங்கப்பூரில் சுதந்திரமாக நடமாடுகின்றார். அவரின் புதல்வரின் திருமணத்துக்குத் தற்போதைய பிரதமரும் சென்று வந்துள்ளார்.

அர்ஜுன் அலோசியசிடம் காசோலை மூலம் பணம் பெற்ற 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களிடம் குற்றப்புலனாய்வு அதிகாரிகள் எந்தவித விசாரணைகளையும் நடத்தவில்லை. அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவும் அவர்கள் தவறியுள்ளனர்.

அப்படியான ஒரு நாட்டில் முன்னாள் ஜனாதிபதியிடம் விசாரணைகளை மேற்கொள்ள இரகசியப் பொலிஸார் வருகின்றனர். இவ்வாறு அரசு சட்டத்தை தமக்கு ஏற்றவாறு வளைக்கின்றது.

எனவே முதலில் மத்திய வங்கி முறைகேடு தொடர்பில் விசாரிக்க வேண்டும் – என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தெற்குக்கு உபதேசியுங்கள்

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த சுகாதார, ஊட்டச்சத்து, உள்நாட்டு மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரத்ன இங்கு உலக நிலைமை பற்றிய ஒரு பொது அபிப்பிராயத்தை வெளிப்படையாகக் கூறிச் சென்றிருக்கின்றார்.

*“இந்த 21ஆம் நூற்றாண்டில் இனங்களுக்கு இடையிலான வெறுப்புகளுக்கு இடம் கொடுக்க முடியாது. எமக்கிடையில் முரண்பாடுகள் காணப்படுமாயின் அவற்றைப் பேச்சு மூலம் முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். எனவே சிவாஜிலிங்கம் போன்றோர் எமது பிரதான அரசியல் நீரோட்டத்தில் இணைந்து பேச்சுக்களை மேற்கொள்ள முன்வரவேண்டும்.”*

– இவ்வாறு இங்கு கூறிச் சென்றிருக்கின்றார் அமைச்சர் ராஜித சேனாரத்ன.

2015 இல் பொறுப்பேற்ற நல்லாட்சி அரசு தமிழர் தாயகத்துக்கு – யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு – உரிய அபிவிருத்திகளைச் செய்கின்றோம் என்றும் –

வடக்கில் உள்ள பிரச்சினைகளைக் கையாள்வது தொடர்பாக நாம் ஏற்கனவே உங்களுக்குச் சுதந்திரத்தையும், உரிமையையும், சுயாதீனச் செயற்பாட்டையும் வழங்கியிருக்கின்றோம் என்றும் –

யாழ்பபாணத்தில் வைத்துப் பெருமிதத்துடன் கூறியிருக்கின்றார் அவர்.

கொழும்பிலிருந்து வடக்கு, கிழக்குக்கு வந்து இப்படிப் பீற்றிக் கூறிச் செல்லும் அரசுத் தரப்புத் தலைவர்களுக்கு சில விடயங்களைச் சுட்டிக் காட்டுவது அவசியமாகின்றது.

நீங்கள் இப்போது வடக்கு, கிழக்குக்கு – தமிழர்களுக்கு – வழங்குபவை எனக் கூறப்படும் எவையுமே நீங்கள் எமக்குச் செய்யும் சகாயங்களே அல்ல. அவை எமக்குள்ள உரிமைகள். அவற்றைச் செய்வதுதான் உங்கள் கடமை; பொறுப்பு.

தமிழரும் சேர்ந்து வழங்கிய ஆதரவினால்தான் நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்கள். இன்றும் அதிகாரத்திலும் இருக்கின்றீர்கள். தமிழர் தரப்பு இன்று எதிர்க்கட்சித் தலைவர் பதவி உட்பட்ட எதிரணிப் பக்க நிலைப்பாட்டை உத்தியோகபூர்வமாகக் கொண்டிருந்தாலும் – கூட்டு எதிரணிக் கட்சிகள் போன்றவற்றின் கடும் வசைவுகளுக்கு மத்தியிலும் உங்கள் அரசைக் காபந்து பண்ணும் வேலையைத்தான் அது செய்து கொண்டிருக்கின்றது.

அரசாங்கம் என்ற முறைமையில் மட்டுமல்லாது உங்கள் ஆட்சிக்கு முண்டு கொடுக்கும் தரப்பு என்ற வகையிலும் இவை எல்லாம் தமிழர் தாயகத்துக்கு – தமிழர் பிரதேசங்களுக்கு – நீங்கள் செய்ய வேண்டியவைதான்; கடப்பாடுகள்தாம். அவற்றை உங்கள் சகாயங்கள் போல – நீங்கள் எமக்குச் செய்யும் தாராளங்கள் போல – காட்டுவதில் அர்த்தமில்லை என்பதை முதலில் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்தது, சிவாஜிலிங்கம் போன்றோருக்கு நீங்கள் விடுத்த அழைப்புப் பற்றியது.

வழக்கமாக, இத்தகைய பாணியில் பேசும் தென்னிலங்கைத் தலைவர்கள், சிவாஜிலிங்கம் வரிசையில் வடக்கு முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், மாகாண அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் போன்றோரையும் சேர்த்துக் கொள்வார்கள். ஏதோ நாகரிகம் கருதி அந்தப் பெயர்களை நீங்கள் விட்டுவிட்டீர்கள் போலும். நல்லது.

*“இந்த இருபத்தியோரம் நூற்றாண்டில் இன வெறுப்புகளுக்கு இடமில்லை. பிரச்சினைகளுக்கு வன்முறை மூலமோ, ‘பயங்கரவாத நடவடிக்கைகள்’ மூலமாகவோ தீர்வு காண்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது”* – என்பன போன்ற நிலைமைகளை தெற்கிலிருந்து வந்து எங்களுக்கு உபதேசம் செய்ய முன்னர், அதே இருபத்தியோரம் நூற்றாண்டின் வேறு பல கட்டாயங்களை நீங்கள் தெற்குக்கு – உங்கள் பிரதேசத்துக்கு – போதிக்க வேண்டும். போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்டு, பெரிது நலிவுற்றிருக்கின்றோம் என்பதற்காக எங்களுக்கு மட்டும் தனித்து உபதேசம் செய்ய முற்படாதீர்கள்.

தெற்குக்கு நீங்கள் உபதேசம் செய்ய வேண்டிய – போதிக்க வேண்டிய பல முக்கிய விடயங்கள் உள்ளன.

★ *இந்த இருபத்தியோரம் நூற்றாண்டில் – சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள், சர்வதேச அடிப்படை மனித உரிமைகள் போன்றவற்றை அப்பட்டமாக மீறி, சிறார்கள், மகளிர், வயோதிபர்கள் உட்படப் பல்லாயிரம் பேரைக் கொன்றொழித்து, பல்லாயிரம் பேரை படுகாயப்படுத்தி, அங்கவீனப்படுத்தி, பல்லாயிரம் கோடி ரூபா சொத்துக்களை அழித்து, நாசப்படுத்தி, பெரும் இனவழிப்பு மற்றும் கொரூர யுத்தக் குற்றங்களைப் புரிந்துவிட்டு, அவற்றை அப்படியே மூடி மறைக்க முடியாது; உண்மைகளைக் கண்டறியாது புறம் தள்ள முடியாது; நீதியை நிலைநாட்டாது தப்பிக்க முடியாது; யுத்தக் குற்றவாளிகளைக் காபந்து பண்ணி நிரந்தரமாகக் காப்பற்ற முடியாது. நீதி, நியாயமான விசாரணைகளைத் தடுக்க முடியாது.*

★ *ஜனநாயகத் தீர்மானம் என்பது அட்சர கணித அடிப்படையில் பெரும்பான்மையினரின் முடிவைத் தீர்ப்பாக ஏற்பது. நியாய மான சர்ச்சைகளுக்கு நீதியான தீர்ப்பு எண்ணிக்கையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதில்லை. நீதி, நியாயம், தார்மீகத்தின் அடிப்படையிலேயே அவை முடிவு செய்யப்பட வேண்டும். அந்த வகையில், இரண்டு தேசியங்களைத் தன் தாயமாகக் கொண்ட இலங்கைத் தீவில் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு எண்ணிக்கையின் அடிப்படையிலான ஜனநாயக முறையில் மட்டும் அமைவதாக இருக்க முடியாது. இயற்கை நீதி, சர்வதேசச் சட்டங்கள், நியாயங்கள் , சரித்திர உண்மைகள், உரிமைகள் ஆகியவற்றின் மீதே அவற்றைக் காட்ட வேண்டும்.*

தீர்வுக்காக சிவாஜிலிங்கம் போன்றோருக்கு அழைப்பு விடுக்க முன்னர், அமைச்சர் ராஜித சேனாரத்ன 21ஆம் நூற்றாண்டின் இந்த உண்மைகளைத் தெற்குக்கு உபதேசம் செய்வாராயின் அது பொருத்தமானதாகவும் – நியாயமானதாகவும் இருக்கும். அவர் செய்வாரா?

# பெண்தலைமைக் குடும்பங்களுக்கு வவுனியாவில் வாழ்வாதார உதவி



யாழ்ப்பாணம், ஓக.18

வடமாகாண மகளிர் விவகார அமைச்சினால் வவுனியா தெற்கு பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00மணிக்கு வவுனியா மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவு செய்யப்பட்ட 10 பயனாளிகளுக்கு விவசாயம், சிறுகைத் தொழில் முயற்சி, சிறுகடை வியாபாரம், உணவு தயாரித்தல் மற்றும் கோழிவளர்ப்புக்கான வாழ்வாதார உதவிப் பொருட்களை வழங்கினார்.

வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர் திருமதி.ரூபினி வரதலிங்கம், வவுனியா மாவட்ட சமூகசேவைகள் அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள், அமைச்சு மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# 35 கிலோ மரை இறைச்சியுடன் வவுனியாவில் இருவர் சிக்கினர்



வவுனியா, ஓக.18

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் 35 கிலோ மரை இறைச்சியுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முற்பகல் பட்டா ரக வாகனத்தில் மரை இறைச்சியை எடுத்துச்சென்றபோதே இருவரும் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா போதை ஒழிப்புப் பிரிவினருடன், வவுனியா புலனாய்வுப்பிரிவினருக்குக்கிடைத்த இரகசியத் தகவல் அடிப்படையில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மஹிந்த வில்லுவராச்சியின் வழிநடத்தலில் எஸ். ஜ. உசாந்த தலைமையில் சென்ற குழுவினர் நெளுக்குளம் பகுதியில் வைத்து பட்டா ரக வாகனத்தை வழிமறித்துச் சோதனை மேற்கொண்டபோது பழுதடைந்த உணவுகளுக்குள் மறைத்து பொதி செய்யப்பட்டு கிடாச்சூரியிலிருந்து வவுனியாவுக்கு எடுத்துச்செல்லப்பட்ட 35 கிலோ கிராம் மரை இறைச்சியைக் கைப்பற்றினர். அதனைக் கொண்டு சென்ற 39 மற்றும் 19 வயதுடைய தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த இரு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட மரை இறைச்சியும் கைதான இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலிஸார் கூறினர். (ஐ–100)

# பாலிநகர் பாடசாலை முன் உள்ள படை முகாமை அகற்றவேண்டும்

## மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் கோரிக்கை



கிளிநொச்சி, ஓக.18

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் பாலிநகர் மகா வித்தியாலயத்திற்கு முன்னால் உள்ள படை முகாமை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற மாந்தை கிழக்கு பிரதேச சபை அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கையை அவர் முன்வைத்தார்.

பாலிநகர் மகாவித்தியாலத்துக்கு முன்னால் உள்ள படையினரின் முகாமினால் பாடசாலை மாணவர்களுக்கு உள ரீதியான தாக்கம் ஏற்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள் உளத்தாக்கத்திற்கு உள்ளாகாமல் கல்வி கற்பதற்கான சூழல் மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் ஏற்படுத்தப்படவில்லை. இதற்கு முன்னர் நடைபெற்ற அபிவிருத்திக்குழுக் கூட்டத்திலும் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்று ரவிகரன் சுட்டிக்காட்டினார்.

இதற்கு அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர் அமைச்சர் றிசாத் பதியூதின், இந்தப் படை முகாம் தொடர்பில் பிரதேச செயலாளரால் படைத்தரப்பிடம் கேட்கப்பட்டபோது அது சட்டரீதியாகவே அமைக்கப்பட்டுள்ளது என்று படையினர் தெரிவித்துள்ளனர் என்றும், அதனால் மாவட்ட அபிவிருத்திக்குழுக்கூட்டத்திற்கு இந்த விடயத்தை மாற்றக் கோரி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும், மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் படைத் தரப்பினரையும் அழைத்து இதுபற்றி கதைக்கலாம் என்றும் கூறினார். (ஐ)

## நாளை

18.08.2018
சனிக்கிழமை
நட்சத்திரம் : விசாகம் மு.இ. 10.42 வரை
திதி : ஸ்ப்தமி கா.6.13 வரை
சுபநேரம் : 03.05 – 04.35 வரை
இராகுகாலம் : 08.05 – 10.35 வரை

# தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பொத்துவில் கனகர் கிராமத்து மக்கள்!






அம்பாறை, ஓக.18

அம்பாறை – பொத்துவில் கனகர் கிராமத்து மக்களினால் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்ட நில மீட்புப் போராட்டம் 3 ஆவது நாளாகவும் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டத்தில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இரவு பகல் பாராமல் கலந்து கொள்கின்றனர் என ஏற்பாட்டுக் குழுவின் செயலாளர் எம். குழந்தைவேல் தெரிவித்துள்ளார்.

நாம் எமது நில மீட்புப் போராட்டத்தை ஆரம்பித்து மூன்று நாட்கள் கடந்துவிட்டன. ஆனால் எமது பிரச்சினைகள் தொடர்பாக எந்த அரச அதிகாரிகளோ அரசியல்வாதிகளோ கண்டுகொள்ளவில்லை. எமது பிரச்சினைக்கு தீர்வும் கிடைக்கவில்லை ஆனால் எமது போராட்டத்தை நாம் கைவிடப் போவதில்லை என போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் கூறியுள்ளனர்.

நாங்கள் பல அசௌகரியங்களுக்கு மத்தியில் இவ்விடத்தில் எமது உரிமைகளை கேட்டு நிற்கின்றோம்.

ஆனால் எவ்வளவு பிரச்சினைகள் வந்தாலும் எமது போராட்டத்தை, தீர்வு கிடைக்கும்வரை நாம் நிறுத்தப் போவதில்லை என இவ்விடத்தில் கூறிக்கொள்ள விரும்பு கின்றேன் என போராட்ட ஏற்பாட்டுக் குழுவின் செயலாளர் எம்.குழந்தைவேல் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியாவில் மரம் சரிந்து வீழ்ந்தது தடைப்பட்டது போக்குவரத்து!



வவுனியா, ஓக.18

வவுனியா சுற்றுவட்ட வீதியில்நேற்று அதிகாலை மரமொன்று சரிந்து வீழ்ந்ததில் அவ் வழியூடாக போக்குவரத்து தடைப்பட்டது.

சுற்றுவட்ட வீதியில் நின்ற பழமையான மரம் ஒன்றே நேற்று அதிகாலை வீதியில் சரிந்து வீழ்ந்துள்ளது. இதன் காரணமாக சுற்றுவட்ட வீதியூடான போக்குவரத்து பல மணிநேரமாக தடைப்பட்டிருந்தது.

இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு தகவல் வழங்கப்பட்ட போதிலும் மரத்தை அகற்றும் பணிகள் தாமதமடைந்தன இதனால் இவ் வீதியூடாக பணிக்கு செல்லும் உத்தியோகத்தர்கள் வவுனியா நகருக்கு சென்று அதன் ஊடாகவே செல்ல வேண்டி ஏற்பட்டது என விசனம் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்த இடத்திற்கு விரைந்த இலங்கை மின்சாரசபையினர் மின்சாரத்தினை துண்டிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுபட்டனர் என தெரிவிக்கப்படுகின்றது.

# இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு பயிற்சித் திட்டம்!



என்டபிரைஸ் ஸ்ரீலங்கா கடன் திட்டத்தை விரைவுபடுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் நடைபெற்றது.

கொழும்பில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட மட்டத்தில் இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு பயிற்சித் திட்டங்களை ஆரம்பிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் நிதியமைச்சு, மத்திய வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

# பாடசாலை மாணவர்களுக்காக பஸ் சேவைகளை நடத்திய சகலருக்கும் நன்றி: கல்வி அமைச்சர்



பிள்ளைகளின் வாழ்க்கையை தீர்மானிக்கும் க.பொ.த உயர்தர பரீட்சை நடைபெறும் சமயத்தில், ஒருசில குழுக்கள் அரசியல் நோக்கத்துடன் அரசையும், மக்களையும் இக்கட்டில் ஆழ்த்தும் வகையில் வேலை நிறுத்தங்களை அமுலாக்கி வருகின்றனர் என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையை புரிந்து கொண்டு, தனியார் பஸ் ஊழியர் சங்கம் அமுலாக்கிய வேலை நிறுத்தத்தை புறக்கணித்து, பாடசாலை மாணவர்களுக்காக பஸ் சேவைகளை நடத்திய சகலருக்கும் கல்வி அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளார்.

நாட்டு நலனை கருத்திற் கொண்டு பாடுபடும் தொழிற்சங்க அமைப்புக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு தயாராக உள்ளதென அவர் கூறியுள்ளார்.

கல்வி அமைச்சர் விடுத்த அறிக்கையில் இந்தக் விடயங்கள் இடம்பெற்றுள்ளன.

# ரயிலுடன் மோதுண்டு இரு மாடுகள் பலி!



வவுனியா, ஓக.18

வவுனியா – பறநாட்டன்கல் பகுதியில் ரயிலுடன் மோதுண்டு இரு மாடுகள் பரிதாபமாக உயிரிழந்துள்ளன.

இந்த விபத்து நேற்று முன்தினம் காலைவேளையில் இடம்பெற்றுள்ளது.

பறநாட்டன்கல் ரயில் கடவைக்கு அருகில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ரயிலுடன் மோதுண்டு இந்த இரு மாடுகளும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தன.

இந்த விபத்தின் காரணமாக 15 நிமிடங்கள் தாமதித்தே இந்த ரயில் பயணித்தது என தெரிவிக்கப்பட்டது.

# அதிரடிப்படையினரின் வாகனம் கல்வீச்சுக்கு இலக்காகி சேதம்



திருகோணமலை, ஓக.18

திருகோணமலை – பம்மதவாச்சி பகுதியில் விசேட அதிரடிப்படையினர் சென்ற பஸ்ஸுக்கு மறைந்திருந்து கல் வீச்சு நடத்திய சம்பவமொன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

திருகோணமலை, சர்தாபுர விசேட பொலிஸ் அதிரடிப் படையினர் திருகோணமலை–ஹொரவபொத்தானை

பிரதான வீதியினூடாக பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்த போது சிலர் வீதியோரத்தில் மறைந்திருந்து கல்வீச்சு நடத்தி யுள்ளனர் என தெரியவருகின்றது.

இந்தச் சம்பவத்தால் விசேட அதிரடிப்படையினர் பயணித்த பஸ்ஸின் முன் கண்ணாடி உடைந்துள்ளது.

இதையடுத்து உடனடியாக செயற்பட்ட விசேட அதிரடிப் படையினர் சந்தேகநபர் ஒருவரை துரத்தி மடக்கிப்பிடித்துள்ளனர் என்றும் அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் போல் நடித்துள்ளார் என்றும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கல்வீச்சு நடத்திய நபர் வெளி மாவட்டத்திலிருந்து வருகை தந்தவர் எனவும் அவர் மொறவெவ, கன்னியா மற்றும் பம்மதவாச்சி பகுதிகளில் கடந்த இரண்டு, மூன்று நாள்களாக நடமாடினார் எனவும் அப் பகுதியிலுள்ளவர்கள் தெரிவித்தனர்.

மேலும் கல்வீச்சு நடத்தியவர் மொறவெவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

# இந்திய வீடமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணிகள் ஆரம்பம்!



கொழும்பு, ஓக.18

மலையக மக்களுக்காக இந்திய அரசால் வழங்கப்பட்ட வீடமைப்பு திட்டத்தின் இரண்டாம்கட்ட நிர்மாணப்பணிகளின் முதலாவது திட்டமாக ராகலை, டியனில்ல தோட்டத்தில் 166 வீடுகளுக்கான அடிக்கல் நடப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இரண்டாம் கட்டமாக 2866 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

நிகழ்வில் கலந்துகொண்டு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.திலகராஜ் உரையாற்றுகையில்–

இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வீடமைப்பு திட்டத்தில் முதற்கட்டமாக நிர்மாணிக்கப்பட்ட 1134 வீடுகளை மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வலப்பனை ஊடான கண்டி – நுவரெலியா பிரதான வீதியின் இருபுறங்களிலும் அமையவுள்ள இந்த வீடமைப்புத் திட்டம் நகருக்குரிய அம்சங்களோடு அமைக்கப்படுவதோடு அதற்கு இந்தப் பிரதேசத்தில் பிறந்து வளர்ந்த கல்வியாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மலையப்பன் ராமலிங்கம் நினைவாக ' ராமலிங்கம் நகர்' என அமைக்கப்படல் வேண்டும் என முன்மொழிவு செய்கிறேன் என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் இந்திய உதவி உயர்ஸ்தானிகர் திரேந்தர் சிங், வீடமைப்புத்திட்ட உயர்தானிகர் பொறுப்பதிகாரி கவுன்சிலர் மஞ்சுநாத், செயலாளர் ரமேஷ், மத்திய மாகாண சபை உறுப்பினர்கள் சரஸ்வதி சிவகுரு, டிரஸ்ட் நிறுவன தலைவர் வி. புத்திர சிகாமணி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir



## பிரதமர் வாஜ்பாயின் மறைவுக்கு ஜனாதிபதியும், பிரதமரும் அனுதாபம்!

இந்தியாவின் முன்னாள் பிரதம அமைச்சர் அடல் பிஹாரி வாஜ்பாயின் மரணம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் சிரேஷ்ட அரசியல்வாதிகளில் ஒருவராக திகழ்ந்து மூன்று தடவைகள் பிரதமராக கடமையாற்றிய வாஜ்பாய், நீண்ட நாள் சுகவீனத்தை தொடர்ந்து தமது 93 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

இன்று நாம் மிகச்சிறந்த மனிதநேயம் கொண்ட தலைவரையும், இலங்கையின் உண்மையான நண்பரையும் இழந்திருக்கின்றோம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அமரர் வாஜ்பாய் பூகோள புவியியல் அரசியல் நிலை மாற்றத்தில் இந்தியாவை சரியாக வழி நடத்தியவர் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## தினசரி ராசி பலன் (18.08.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆவணிதிங்கள் 2ஆம் நாள் சனிக்கிழமை அஷ்டமித்திதி பி.இ. 1.47 மணி வரை பின்னர் நவமி. நட்சத்திரம்: விசாகம் மாலை 5.20 வரை பின்னர் அனுஷம். சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - காலை 9.08 மணி முதல் 10.41 மணி வரை.

**சுபநேரம்** - மாலை 3.04 மணி முதல் 4.34 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆவணி மாத வளர்பிறை அஷ்டமி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- விசாகம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** மத்திம பலன்கள் காணப்படுகின்ற. பொருள் வரவு சுமாராக இருக்கும் செலவினங்கள் அதிகரிக்கும். தொழில் கடுமையாகப்பாடுபட்டும் பலன் குறையும். தேகாரோக்கியம் பாதிப்படையும்.

**ரிஷபம்** யோகமான நாள். தனலாபம் அதிகரிக்கும். குடும்பத்தல் பாசம், நெருக்கம் அதிகரிக்கும் சிலருக்கு தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும். அசையாச் சொத்துக்கள் சிலர் வாங்குவார்கள்.

**மிதுனம்** இன்பமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். பெண்கள் விரும்பிய ஆடம்பரப் பொருள்களை வாங்கி மகிழ்வார்கள். வேலை தேடுவோருக்கு வேலை கிடைக்கும்.

**கடகம்** சலனம் மிகுந்த நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். மனதில் ஒரு வித கவல, குழப்பம் உண்டாகும். குடும்பத்தில் சிறுசிறு உட்பூசல்கள் காணப்படும். வியாபாரத்தில் பாரிய நட்டமுண்டாகும்.

**சிம்மம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். எடுக்கும் முயற்சியில் தடை, தாமதம் ஆகும். பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தமான வழக்குகள் தாமதமாகும்.

**கன்னி** நன்மையானநாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். வியாபாரம் நன்கு செழிப்படையும். உத்தியோகத்தில் வரவேற்பு, மதிப்பு அதிகரிக்கும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும்.

**துலாம்** சுபீட்சமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ததும்பும். சகோதர உறவு வலுவடையும். ஆடை, அணிமணிகள் சேர்க்கை உண்டாகும். திருமண வாய்ப்புக்கள் வலிய வரும்.

**விருச்சிகம்** சஞ்சலமான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் குழப்ப நிலை காணப்படும். செய்யும் தொழிலில் பல இடையூறுகள், போட்டி காணப்படும். நண்பர்கள், உறவினர்களால் தொல்லை உண்டாகும்.

**தனுசு** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடுபத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் முன்னேற்றத்தால் பெருமை உண்டாகும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள்.

**மகரம்** விருத்தியான நாள். பொருளாதாரம் மன நிறைவைத் தரும். குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகரிக்கும். சகோதர உறவு பலப்படும். பிரிந்திருந்த உறவுகள் ஒன்றிணையும். வியாபாரம் விருத்தியடையும்.

**கும்பம்** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்ப ஒற்றமை மேலோங்கும். வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் முதன்மை அடைவார்கள்.

**மீனம்** துன்பமான நாள். வருமானம் குறையும். குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கும். தொழிலில் பாடுபட்டதன் பலன் குறையும். உடல் நோய் வாய்ப்படும். திருமண காரியங்கள் இழுபறியில் இருக்கும்.

சந்திராஷ்டம நாள்; **பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

## இலங்கையில் உள்ள தமது பெற்றோரை தேடும் ஐரோப்பியர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

பி.பி.சி. 2 நிகழ்ச்சியின் மூலம் இலங்கையில் உள்ள தமது பெற்றோரை தேடும் ஐரோப்பியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இலங்கையில் இருந்து 1980 களில் பிரித்தானியா உட்பட்ட பல்வேறு வெளிநாட்டவர்களால் தத்தெடுக்கப்பட்ட குழந்தைகள் இன்று பெரியவர்களான பின்னர் தமது பெற்றோரைத் தேடும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

1980களில் இலங்கையில் இருந்து 11ஆயிரம் குழந்தைகள் வரை வெளிநாடுகளில் உள்ளவர்களுக்குத்தத்து கொடுக்கப்பட்டனர் என ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதனைஊடகங்கள்வெளியிட்ட பின்னர் பலரும் விழிப்படைந்தனர்.

இது தொடர்பான தகவல்கள் வெளியான நிலையில் குழந்தைகளாகதத்துக்கொடுக்கப்பட்டவர்கள்தற்போதுபெரியவர்களான நிலையில் இலங்கைக்கு வந்து தமது பெற்றோரைக் கண்டுபிடித்த சம்பவங்களும் 2009ஆம் ஆண்டின் பின்னர் நிகழ்ந்தன.

இந்தநிலையில் பிரித்தானியாவில் புதிதாக இரண்டு இலங்கைப்பெண்கள் இலங்கையில் உள்ள தமது பெற்றோரை தேடும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஷர்யா மற்றும் ரெபேக்கா என்ற இரண்டு பெண்கள் தமது பெற்றோரைத் தேடுவதாக பி.பி.சி. 2 அலைவரிசையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாயைத் தேடுவதற்காக என்ற நிகழ்ச்சியின் ஊடாகவே இந்த இரண்டு இலங்கைப் பிறப்பு பெண்களும் தமது தாய்மாரை கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே சுவிற்சர்லாந்து, அயர்லாந்து உட்பட்ட நாடுகளில் இருந்தும் இலங்கையில் தமது உறவுகள் இருக்கின்றமை அறிந்து அவர்களைத் தேடும் பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

## விதுல்கா மின்வலு, எரிசக்தி கண்காட்சி ஆரம்பம்!



விதுல்கா என்ற பெயரிலான மின்வலு, எரிசக்தி கண்காட்சி நேற்று ஆரம்பமானது.

இந்தகண்காட்சிநாளை ஞாயிற்றுக்கிழமை வரை கொழும்புபண்டாரநாயக்க மாநாட்டு மண் டபத்தில் இடம்பெறும்.

இதனைஇலங்கை சுனித்திய எரிசக்தி அதிகார சபை ஏற்பாடு செய்கிறது.

அங்குரார்ப்பண விழாவில் அமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

சகல துறைகளிலும் எரிசக்தி சார்ந்த செயற்றினை மேம்படுத்தி, புதுபிக்கக் கூடிய மின்வலு தொழில்நுட்பத்தை விருத்தி செய்வது கண்காட்சியின் நோக்கமாகும்.

## நீரேந்துப் பகுதி நீர் தேக்கங்களில் நீர் மட்டம் அதிகரிப்பு!

கொழும்பு, ஓக.18

மத்திய மலைநாட்டு பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழையின் காரணமாக மின் உற்பத்தி நீரேந்து பகுதிகளில் நீர் மட்டம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது.

இப்பகுதிகளில் மழை ஆரம்பிப்பதற்கு முன்னர் நீர்தேக்கங்களில் நீர் மட்டம் 71 சதவீதமாக இருந்தது. தற்பொழுது இது 81.6 சதவீதமாக அதிகரித்துள்ளது.

## கொழும்பு மாநகர சபை உறுப்பினரின் சம்பள அதிகரிப்புக்கு ஜே.வி.பீ எதிர்ப்பு!

கொழும்பு, ஓக.18

கொழும்பு மாநகர சபை உறுப்பினர்களின் சம்பளத்தை 25 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க, மாநகர மேயர் ரோசி சேனாநாயக்க எடுத்துள்ள தீர்மானத்துக்கு, மக்கள் விடுதலை முன்னணி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

மேயரின் இந்த யோசனை எதிர்வரும் பொதுக் கூட்டத்தின் போது தோற்கடிக்கப்படும் என, மக்கள் விடுதலை முன்னணியின் மாநகர சபை உறுப்பினர் ஹேமந்த வீரகோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபையில் அங்கம் வகிக்கும் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் 6 பேரும் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாநகர சபை உறுப்பினர்களின் சம்பளம் மேற்குறிப்பிட்டவாறு அதிகரிக்கப்பட்டால், மக்களிடமிருந்து பெறப்படும் வரிப்பணத்துக்கு மேலதிகமாக, 1,428 லட்சம் ரூபா செலவிட வேண்டி ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

## நல்லூரில் இன்று இசைக்கச்சேரி

நல்லூர், ஓக.17

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை யொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் –

தெய்வீக இசையரங்கில் (மாலை 6.45 முதல் 8.15 வரை) திருமுறை அரங்கு இடம்பெறும்.

இன்றைய இசைக் கச்சேரியில்–

பாட்டு: சிவநாதன் பிரதீபன், வயலின்: அ.ஜெயராமன், மிருதங்கம்: ம.லோகேந்திரன், கெஞ்சிரா ஞா.வசந்த, கடம்: கு.ரவிசங்கர். (இ

## வாகனத் தரிப்பிடத்தில் மோசடி; வவு. நகரசபைக்கு முறைப்பாடு

வவுனியா, ஓக 18

வவுனியா ரயில் நிலைய வீதியில் வங்கிகளுக்கு முன்பாக அமைந்துள்ள வாகனத் தரிப்பிடத்தில் போலி ரிக்கெட் விநியோகம் இடம்பெறுவதாக வவுனியா நகர சபையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா ரயில் நிலைய வீதியில் வங்கிகளுக்கு முன்பாக அமைந்துள்ள வாகனத் தரிப்பிடத்தில் வாகனங்கள் நிறுத்துவதற்கு சிறியரக வாகனத்துக்கு ரூபா 30, கனரக வாகனத்திற்கு ரூபா 50 அறவிடப்படுவது வழமை. இதற்கான குத்தகை வவுனியா நகரசபையினரால் வவுனியா வர்த்தகர் சங்கத்துக்கு வழங்கப்பட்டது.

கடந்த சில வாரங்களாக அங்கு பணிபுரியும் உத்தியோகத்தரால் சிறியரக வாகனத்திற்கு ரூபா 50 அறவிடப்படுகிறது எனவும் அந்த ரிக்கெட்டில் முத்திரைவையும் காணப்படுவதில்லை எனவும், சில சமயங்களில் சிறியரக வாகனத்திற்கு ரூபா 30 முத்திரை பதித்த ரிக்கெட்டை அவர் விநியோகிப்பதாகவும் பொது மக்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா நகர சபையின் தலைவர் இராசலிங்கம் கௌதமனிடம் வினவியபோது–

இந்த வாகனத் தரிப்பிடத்தின் குத்தகை வவுனியா வர்த்தக சங்கத்தினருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ் விடயம் தொடர்பாக அவர்களிடம் விசாரணைசெய்யப்படும்.–என்றார்.

வவுனியா வர்த்தகர் சங்கத் தலைவர் எஸ்.சுஜனிடம் வினவியபோது–

சிறிய வாகனத்திற்கு ரூபா 30, பெரிய வாகனங்களுக்கு ரூபா 50 அறவிடப்படுகின்றது. இவ்விடயம் தொடர்பாக ஏற்கனவே முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது. அந்த ஊழியர் மீது விசாரணை நடத்தப்படுகிறது.–என்றார்.

(ஐ-100)

# இறுதி யுத்தத்தில் காணாமல்போனோர் பலர் வெளிநாட்டில் மாற்றுப்பெயர்களில் உள்ளனர்!




**இறுதி யுத்தத்தில் காணாமல்போனோர் பெயர்ப் பட்டியலிலுள்ள பலர் வெளிநாடுகளில் மாற்றுப்பெயர்களில் உள்ளனர். முதலில் சர்வதேச நாடுகளிலுள்ள இலங்கையர்கள் தங்கள் பெயர், விபரங்களை வெளியிட வேண்டும். அதன் பின்னரே இலங்கையில் உண்மையான காணாமற்போனோர் பட்டியலை தயாரிக்க முடியும் என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் கலந்து கொண்ட கட்சியின் ஊடக பேச்சாளரும் அமைச்சருமான மஹிந்த சமரசிங்க இதனை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

ஊடகவியலாளர் கீத்நொயார் கடத்தப்பட்ட விவகாரம் குறித்து வாக்குமூலம் பெற்றுக்கொள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. பின்னர் சி.ஐ.டி. யினர் ஒத்துழைப்புடன் அவரது வீட்டிலேயே வாக்குமூலத்தை பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் மஹிந்த ராஜபக்ஷவை மதிக்க வேண்டும். அவருக்கான அங்கீகாரத்தை கொடுக்க வேண்டும். ஆகவே அவரது வீட்டுக்கு சென்று வாக்குமூலம் எடுக்கும் நடவடிக்கை உகந்தது என நாமும் நினைக்கின்றோம்.

அதேபோல் இவ்வாறு கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டமை, சித்திரவதை செய்யப்பட்டமை, கொல்லப்பட்டமை என்பன சர்வதேச ரீதியில் இலங்கையை பெரும் அழுத்தங்களுக்கு உள்ளாக்கியது. மனித உரிமைகள், ஊடக அடக்கு முறை என்ற பல்வேறு அழுத்தங்கள் எழவும் இதுவே காரணமாக அமைந்தது. கடந்த அரசாங்கத்தில் இவ்வாறான பல அசம்பாவிதங்கள் இடம்பெற்றன. நாம் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அடக்கு முறையை வன்மையாக கண்டிக்கின்றோம்.

மேலும் போர் குற்றங்கள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். எனினும் இறுதி யுத்தத்தில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்ற கணிப்பு தவறானது. தருஸ்மான் இலங்கையை சரியாக கணிக்காது தயாரித்த அறிக்கையில் இதனை கூறியுள்ளார். எனினும் எமது இராணுவம் பொதுமக்களை இலக்கு வைத்து ஒரு போதும் யுத்தத்தை முன்னெடுக்கவில்லை. பொதுமக்களை பாதுகாத்து புலிகளை மட்டுமே இலக்கு வைத்து யுத்தத்தை முன்னெடுத்தனர். அதனால்தான் இராணுவத்தினர் அதிகளவில் கொல்லப்படவும் காரணமாக அமைந்தது.

அதேபோல் காணாமற்போனோர் விவகாரமே மிகப்பெரிய அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. அதிகமான பெயர்கள் காணாமல்போனோர் பட்டியலில் உள்ளன. எனினும் யுத்த காலத்தில் சரணடைந்ததாக கூறப்படும் நபர்கள் காணாமல் போனதாக ஒட்டுமொத்தமாக கருதுவதும் தவறானது. ஏனெனில் யுத்த காலத்தில் நாட்டை விட்டு வெளியேறியவர்கள் எத்தனை பேர் என்பதற்கான முழுமையாக அறிக்கை வெளிவிவகார அமைச்சிடம் இல்லை.

மேற்கு நாடுகளுக்கு சென்றவர்கள் யார் என்ற விவரங்கள் அந்தந்த நாடுகளின் மூலம் வழங்கப்படுவதும் இல்லை. இலங்கையில் இருந்து சென்றவர்கள் பலர் தமது பெயர்களை மாற்றிக்கொண்டு அந்தந்த நாடுகளில் பதிவாகியுள்ளனர். எனினும் உண்மையான பெயர்கள் இங்கு காணாமற்போனோர் பட்டியலில் உள்ளது. முதலில் சர்வதேச நாடுகளில் உள்ள இலங்கையர்கள் பெயர் விபரங்களை வெளியிட வேண்டும். அதன் பின்னரே இலங்கையில் உண்மையான காணாமற்போனோர் பட்டியலை தயாரிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கு)

## விடுதியென்ற போர்வையில் நடந்த விபசார விடுதி சுற்றிவளைப்பு!

அம்பலாந்தோட்டை பகுதியில் சுற்றுலா பயணிக்களுக்கான விடுதியென்ற பேரில் நடத்திச்செல்லப்பட்ட விபசார விடுதியொன்று சுற்றிவளைக்கப்பட்டு நால்வர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில், அம்பலாந்தோட்டை, கொத்மலை மற்றும் புத்தளம் பகுதிகளைச் சேர்ந்த 46, 26 மற்றும் 41 வயதுகளுடைய மூன்று பெண்களும் ஒரு ஆணும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சுற்றுலா பயணிகள் அதிகம் நடமாடும் குறித்த பகுதியில் தங்குமிட வசதிகளை கொண்ட விடுதியென்ற போர்வையில் விபசார விடுதியொன்று இயங்குவதாக பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து அந்த நால்வரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடுதியின் முகாமையாளர்களான ஆணும், பெண்ணொருவரும் உட்பட விபசாரத்துக்கு தயாராக விருந்த மேலும் இரண்டு பெண்களுமே கைது செய்யப்பட்டனர்.

இவர்களை நேற்று அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பலாந்தோட்டை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## ஓட்டமாவடி வைத்தியசாலைக்கு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு!

மட்டக்களப்பு, ஓக.18

ஓட்டமாவடி – மீறாவோடை கிராமிய வைத்தியசாலைக்கு மூன்று மாடிக் கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச பிரதி அமைச்சர் பைசல் காசீம் ஒரு கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியுள்ளார்.

இந்த நிதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கல்குடா தொகுதி முக்கியஸ்தர் மொஹம்மட் ஹலால்தீனின் கோரிக்கைக்கு அமைய ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதி ஒதுக்கியமைக்கான ஆவணங்கள் அனைத்தையும் பிரதி அமைச்சர் பைசல் காசீம் நேற்று முன்தினம் முஹம்மட் ஹலால்தீன் மற்றும் ஓட்ட மாவடி பிரதேச



சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப் பினர் அன்வர் ஆகியோரிடம் அவரது அமைச்சில் வைத்துக் கையளித்துள்ளார்.

இதேவேளை, கட்டடத்துக்கான அடிக்கல் நாடும் வைபவம் விரைவில் நடைபெறவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த வைத்தியசாலையை முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கையை பிரதி அமைச்சர் மேற்கொண்டுள்ளதோடு இது தொடர்பில் தேசிய திட்டமிடல் திணைக்கள அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

## பிரதான வீதி தாழிறக்கம்!

கொழும்பு – ஹட்டன் பிரதான வீதியில் வட்டவளை, குயில்வத்த பிரதேசத்தின் பிர தான வீதி தாழிறங்கியுள்ளது என வட்டவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை சரிந்திருந்த மண் திட்டுகள் நேற்று முன்தினம் அகற்றப்பட்டு போக்கு வரத்து சீர்செய்யப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். அண்மைக்காலமாக மலையகத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை யால் ஆங்காங்கே மண் திட்டுகள் சரிந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதனால் பொது மக்களை அவதானமாக செயற்படுமாறு கோரப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் வட்டளை, குயில்வத்த பிர தேசத்தின் பிரதான வீதி ஒரு வருடத்திற்கு முன்னரும் இவ்வாறு தாழிறங்கியது எனவும், இந்த வீதி திருத்தியமைக்கப்பட்ட போதும் மீண்டும் இவ்வாறு தாழிறங்கியுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் இந்த பகுதி மேலும் தாழிறங்கும் அபாயம் இருக்கிறது என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## நுவரெலியாவில் 291 குடும்பங்கள் இடம்பெயர்வு





சீரற்ற காலநிலையினால் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக மேல் கொத்மலை நீர்தேக்க பகுதியின் மூன்று வான்கதவுகள் நேற்றுக் காலை திறந்து விடப்பட்டுள்ளன.

மேல் கொத்மலை நீர்தேக்கத்தின் அதிகளவிலான நீர் மட்டம் உயர்ந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் காலை முதல் மாலை வரை இரண்டு வான்கதவுகள் திறக்கப்பட்ட நிலையில் நேற்றுக் காலை ஒரு வான்கதவு திறக்கப்பட்டு மொத்தமாக மூன்று வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா, அம்பகமுவ, கொத்மலை, வலப்பனை போன்ற பகுதிகளில் அதிகளவிலான மழை பெய்து வருவதுடன் பலத்த காற்றும் வீசப்பட்டு வருகின்றது.

பிரதான வீதிகள், பெருந்தோட்ட பகுதிகள் மற்றும் கிராம பகுதியின் குடியிருப்பு பகுதிகளில் மண்சரிவுகளும் ஏற்பட்டு வருகின்றன.

இதுவரை நுவரெலியா மாவட்டத்தில் மூன்று பிரதேச செயலக பகுதிகளில் 291 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

நுவரெலியா, வலப்பனை, அம்பகமுவ போன்ற பிரதேச செயலக பகுதிகளில் வசித்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.எம் பண்டார தெரிவித்துள்ளார்.

அம்பகமுவ பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியிலேயே அதிகளவிலான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வெள்ள நீரை கட்டுப்படுத்த வேலைத்திட்டம்

கொழும்பு, ஓக.18

கொழும்பு நகரில் வெள்ள நீரைக் கட்டுப்படுத்துவதற் கான வேலைத்திட்டங்கள் பல, மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, 36 வேலைத் திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், இந்த வேலைத் திட்டப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டங்களுக்கு அமைய, 3 இறைப்பிகள் நிர்மாணிக்கப்படவுள் ளன. இவை, அம்பதலை,மாலபே, தலங்கம,எவரிவஹேன ஆகிய பிரதேசங்களில், வெள்ள நீரை கட்டுப்படுத்தும் வகையில் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் மகப்பேற்றியல் வைத்தியர் இன்மையால் கர்ப்பவதிகள் நெருக்கடியில்

கிளிநொச்சி, ஓக. 18

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மகப்பேற்று வைத்திய நிபுணர்கள் தற்போது இன்மையால் கர்ப்பவதிகள் பெரும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் மகப்பேற்று நிபுணர்களாக இருவர் கடமை புரிந்த நிலையில் ஒருவர் வருடாந்த இட மாற்றம் மூலம் வெளிமாவட்டத்திற்குச் சென் றுள்ளார். இந்த நிலையில் மற்றைய மகப்பேற்று நிபுணரும் தமது வெளிநாட்டுப் பயிற்சிநெறிக்காக விடுகை பெற்றுச் சென்றுவிட்டார்.

இந்நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் கர்ப்பவதிகள் மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகின்றனர் என பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.




வழமையான நடைமுறைகளின் பிரகாரம் மாவட்டப் பொது வைத்தியசாலையான கிளிநொச்சியிலிருந்து அதனிலும் மேம்பட்ட வசதியுடைய வைத்தியசாலையான யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைக்கே நோயாளர்கள் இடம்மாற்றப்படவேண்டும். மாஞ்சோலை வைத்தியசாலை பல்வேறு வளப் பற்றாக்குறைகளுடன் இயங்கும் நிலையில் கிளிநொச்சியிலிருந்து கர்ப்பவதிகளை மேலதிக சிகிச்சைக்காக மாஞ்சோலைக்கு மாற்றுவது இரண்டு உயிர்களுடன் விளையாடும் செயல் சுட்டிக்காட்டப்படுகிறது.

அத்தோடு இவ்வாறு அனுபப்படும் கர்ப்பவதி ஒருவருக்கு மேலதிக சிகிச்சை தேவைப்படும் போது அவர் முல்லைத்தீவு வைத்தியசாலையிலிருந்து யாழப்பாணம் வைத்தியசாலைக்கே அனுப்பப்படுகின்றார்.

இதேவேளை கிளிநொச்சி வைத்தியசாலையில் அண்மையில் நியமிக்கப்பட்ட உள்ளகப் பயிற்சி வைத்தியர்கள் நிரந்தர மகப்பேற்று வைத்திய நிபுணர்கள் இல்லாத நிலையில் எவ்வாறு உரிய பயிற்சிகளைப்பெற்றுக்கொள்ளப்போகிறார்கள் என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

தம்மால்தான் வைத்திய நிபுணர்கள் வடக்கிற்கு நியமிக்கப்படுகின்றனர் என அறிக்கை கள் விடும் வடமாகாண வைத்தியமன்றமும், தமது வாகன அனுமதிப்பத்திரத்திற்காக வேலைநிறுத்தம் செய்யும் அரச வைத்தியர் சங்கமும், சிற்றுண்டிச்சாலையின் வருமானத்தில் மட்டும் கண்ணாயி ருக்கும் நோயாளர் நலன்புரிச் சங்கமும் மிகவும் அடிப்படை விடயமான மகப் பேற்று நிபுணர் நியமனத்தில் அக்கறை காட்டாது இருப்பது ஏன் எனப் பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் குமாரவேல் தெரிவிக்கையில் –

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமையில் இருந்த இரண்டு மகப்பேற்றியல் வைத்தியர்களில் ஒருவர் ஒரு மாத சுகவீன விடுப்பில் இருக்கிறார். பிரிதொருவர் தனது உயர் கல்விக்காக வெளிநாடு செல்ல இருக்கிறார். அதனால் தான் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

மருத்துவ விடுப்பில் இருப்பவர் மீண்டும் தனது கடமைக்கு திரும்பாது விடின் நெருக்கடி நிலை ஏற்படும். இது தொடர்பில் சுகாதார அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது அவர் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார். முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட காப்பிணித்தாய் மார்கள் தற்போது யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கே அனுப்படுகின்றனர் எனவும் தெரிவித்தார்.

(க- 70)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ஜி.ஆர். போல, மத்தியில் – புதுடில்லியில் – ஈழத் தமிழர்பால் பரிவு கொண்டவர்களாக விளங்கியவர்கள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயும் அவரது அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜோர்ஜ் பெர்னாண்டஸும்.

வாஜ்பாய் மூன்று தடவைகள் இந்தியப் பிரதமராக இருந்தவர். 1996 மேயில் முதலில் – 13 நாள்கள். 1998 முதல் 1999 வரை இரண்டாவது – தடவை 13 மாதங்கள். பின்னர் 1999 முதல் 2004 வரை – முழு ஆட்சிக் காலம்.

இதில் இரண்டாவது தடவை தமது 13 மாத கால அரசை இடைவழியில் அவர் இழந்தமைக்கு மூல காரணம் ஈழத் தமிழர்களின் பால் – அவர்களின் ஆதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தின் பால் – அவரது அரசு காட்டிய பரிவு தான் என்பது பலருக்குத் தெரியாத இரகசியம். அதை இன்று பகிர்ந்து கொள்வது பொருத்தமானது என நினைக்கிறேன்.

வாஜ்பாய் தமது ஆட்சிக் காலத்தில் இலங்கையில் இருந்த சிங்கள அரசுகளின் இனவாதச் செயற்பாடுகளுக்குத் துளியளவும் உதவுவதில்லை என்பதில் உறுதியாக இருந்தார். தமது ஆட்சிக் காலத்தில் அனைத்துக்கட்சிக்கூட்டத்தைக் கூட்டி, இலங்கை அரசுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதில்லை, போரியல் ரீதியான உதவிகளைச் செய்வதில்லை என்ற முடிவை எடுக்கச் செய்து அறிவித்தார்.

இன்னும் விளக்கமாக சொன்னால் சர்வதேசக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளுக்காகச் செல்லும் கப்பல்களை இந்தியக் கடற்படை தடுக்கக் கூடாது என்ற துணிச்சலான முடிவை எடுத்துச் செயற்படுத்தினார். அதுவே அவரது இரண்டாவது ஆட்சிக் காலத்தை 13 மாதங்களில் வீழ்த்தியது.

பிரதமர் வாஜ்பாய் இவ்வாறு ஈழத் தமிழர்களின் பால் பெரிதும் பரிவாக இருந்தமைக்கு அவருடன் கூட்டணி சேர்ந்து ஆட்சி அமைத்து அவரது அரசில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த சமத்தா கட்சித்தலைவர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்தான் பிரதான காரணம். ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஒரு தொழில் சங்கவாதி. பத்தரிகையாளர். விவசாயி. பாதிக்கப்பட்ட சிறுபான்மை இன மக்களுக்காக எப்போதும் குரல் கொடுத்த ஓர் அரசியல்வாதி.

பின் நாள்களில் எல்லா அரசியல் பதவிகளையும் இழந்து தனித்து – ஏகாந்தமாக – கஷ்டப்பட்ட சூழலிலும் கூட, ராஜீவ் காந்தி படுகொலை வழக்கின் எதிரிகளுக்காக உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதற்கென புதுடில்லியில் நிதி திரட்டும் அமைப்பு ஒன்றை உருவாக்கி, அதன் தலைவராக இருந்து கணிசமான நிதி திரட்டிக் கொடுத்தவர். ராஜீவ் கொலை வழக்கில் விசேட நீதிமன்றத்தினால் மரணதண்டனை விதிக்கப்பட்ட 26 பேரில் ஏழு பேர் தவிர ஏனையோர் விடுவிக்கப்படுகின்றமைக்குக் காரணமாக இருந்தவர்களில் ஒருவர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்.

பிரதமர் வி.பி.சிங்கின் பதவிக் காலத்தில் ரயில்வே அமைச்சராகவிருந்த ஜோர்ஜ் பெர்னாண்டஸ், பிரதமர் வாஜ்பாயின் இரண்டாவது, மூன்றாவது ஆட்சிக் காலங்களில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தார்.

பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றதும் இந்தியக் கடற்படைக்கு ஓர் உத்தரவை அவர் வழங்கினார். இந்தியாவின் தெற்குக் கடலில் விடுதலைப் புலிகளின் கப்பல்கள் உட்பட எந்தக் கப்பல்களையும் தமது முன் அனுமதியின்றி பின் தொடரவோ, வழிமறிக்கவோ வேண்டாம் என்பதுதான் அந்த இரகசிய உத்தரவு.

அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் கேணல் கிட்டு பயணித்த கப்பலை சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து வழிமறித்த இந்தியக் கடற்படை அதனைப் பலவந்தமாகத் தனது கடற்பரப்புக்குள் கொண்டு செல்ல வைத்து, கிட்டுவும் சக போராளிகளும் வீரமரணத்தை அரவணைக்கும் கைங்கரியத்தை அரங்கேற்றியது. அப்போதைய காங்கிரஸ் அரசின் கீழ் இதுபோன்ற பல சம்பவங்கள் நடைபெற்று, அதனால் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட பேரிழப்புகளை அறிந்திருந்த ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அதனால் இந்த உத்தரவை விடுத்திருந்தார்.

இந்தியாவில் வாஜ்பாய் காலத்து பாரதீய ஜனதா அரசு அதிகாரத்தில் இருந்த போதுதான் இலங்கைத்தீவில் விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் உச்சத்தில் இருந்தார்கள் என்பதையும் –

இங்கு மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சர்வதேசக் கடற்பரப்பில் புலிகளின் ஆயுதக் கப்பல்களின் நகர்வுகள், புலிகளின் விமானப் பறப்புகள் தொடர்பான நேரடி 'ராடர்' மூலமான வேவுத் தகவல்கள் ஆகியவற்றை இந்தியாவின் காங்கிரஸ் அரசு நேரடியாகப் பங்களித்துத் தந்துதவியமையினாலேயே புலிகளை இராணுவ ரீதியில் அழிக்க முடிந்தது என்பதை இலங்கைத் தரப்பே ஒப்புக் கொண்டுள்ளது என்பதையும் வாசகர்கள் அறிவார்கள்.

இந்தப் பின்புலத்தில் அந்நேரத்தில் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸின் உத்தரவு புலிகளுக்கு எத்தகையளவுக்குப் பெரும் சாதகமாக அமைந்தது என்பதை நான் விவரிக்கத் தேவையில்லை.

இவ்வேளையில்தான் இந்தியக் கடற்படையின் மூத்த தளபதி ஒருவரை பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸின் பரிந்துரையின் பேரில், குடியரசுத் தலைவர் மூலம் பதவியில் இருந்து நீக்கினார் பிரதமர் வாஜ்பாய்.

அந்தப் பதவி நீக்கத்துக்கு வெளியில் பல்வேறு காரணங்கள் கூறப்பட்ட போதிலும், பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸின் பணிப்பை மீறி இந்தியாவின் தென்கடலில் புலிகளின் படகுகளை 'கண் வைக்கும்' நடவடிக்கை தொடர்வதாக ஜோர்ஜ் பெர்னாண்டஸுக்கு கிடைத்த உளவுத் தகவலே காரணம் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அச்சமயம், தமிழகத்தில் ஆட்சியில் இருந்த ஜெயலலிதா அரசு, விடுதலைப் புலிகளுக்கு எதிரான கடும் தீவிரப் போக்கில் செயற்பட்டு வந்தது. புலிகளுக்கு சாதகமான போக்கிலேயே கடற்படை தளபதி பதவியிழக்கின்றார் என அறிந்து சீற்றம் கொண்ட முதல்வர் ஜெயலலிதா அதனை மனதில் வைத்துக் கொண்டு காய் நகர்த்த முயன்றார். நாடாளுமன்றத்தில் வாஜ்பாய் அரசுக்குத் தான் தனது கூட்டணி மூலம் வழங்கி வந்த 17 எம்.பிக்களினதும் ஆதரவை விலக்குகின்றார் என அவர் அறிவித்தார். அதனால் நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பைக் கோரவேண்டிய நிலைக்கு வாஜ்பாஜ் அரசு தள்ளப்பட்டது.

1999 ஏப்ரல் 17 ஆம் திகதி நடத்தப்பட்ட அந்த வாக்கெடுப்பில் – ஜெயலலிதா அணி எதிர்த்து வாக்களித்தமையால், வாஜ்பாஜ் அரசு 269க்கு 270 என்ற அடிப்படையில் ஓரேயொரு வாக்கு வித்தியாசத்தில் தோற்றுப் பதவி இழந்தது.

எனினும், அதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட பொதுத் தேர்தலில் போதுமான பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த வாஜ்பாஜ், அதன் பின்னர் ஒரு முழு நாடாளுமன்ற ஆட்சிக் காலமும் பதவியில் இருந்த – காங்கிரஸ் கட்சி சாராத – பிரமதர் என்ற பெருமையைப் பெற்றார் என்பது வேறு விடயம்.

ஆனாலும், நமக்காக – இலங்கைத் தமிழருக்காக –என்றும் பரிவுடன் செயற்பட்ட அடல் பிஹாரி வாஜ்பாயும், ஜோர்ஜ் பெர்னாண்டஸும் இன்று நம் மத்தியில் இல்லை.

இன்று ஆட்சியில் இருக்கும் மோடி அரசும் இலங்கைத் தமிழர் விடயத்தில் வாஜ்பாய் அரசு போன்று இல்லை என்பதும் கூட உண்மைதான்.

**– மின்னல் –**

## கிளிநொச்சி நகரின் உள்ளக வீதிகள் பல புனரமைப்பு!





கிளிநொச்சி, ஓக. 18

கிளிநொச்சி நகரில் மிக மோசமான உள்ளக வீதிகள் பல புனரமைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி நகர், இரத்தினபுரம், ஆனந்தபுரம் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் காணப்பட்ட பிரதேச சபைக்குச் சொந்தமான பல உள்ளக வீதிகள் முதற் தடவையாக புனரமைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பிரதேசத்திற்குரிய கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்களின் ஒதுக்கீட்டுக்கு அமைவாக கரைச்சி பிரதேச சபையினரால் இந்த வீதிகள் தற்காலிகமாக பொதுமக்களின் போக்குவரத்துக்கு இலகுவாக சீரமைக்கப்பட்டுள்ளன.

(70)

காலைக்கதிர்
Kalaikkathir
சனிக்கிழமை
18.08.2018




# ஈழத் தமிழரின் நலனில் அக்கறை காட்டியவர் தலைவர் வாஜ்பாய்

## மென்மையான நாடாளுமன்றவாதி மட்டுமன்றி கவிஞர், இலக்கியகர்த்தா

■ கே.எஸ்.இராதாகிருஷ்ணன்

அகில இந்திய அளவில் மூத்த தலைவராக இருந்த கலைஞர் கருணாநிதி இன்று இல்லை. கிட்டத்தட்ட அவரது வயதை ஒத்த வாஜ்பாயும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உலகை விட்டுப் பிரிந்து விட்டார்.

பாரத ரத்னா விருது பெற்ற அடல் பிஹாரி வாஜ்பாய் ஒரு சிறந்த கவிஞர், இலக்கியகர்த்தா, ரசனைமிகுந்தவர், ஆங்கிலத்திலும் இந்தியிலும் சிறப்பாக மக்களை ஈர்க்கக் கூடிய வகையில் பேசக்கூடியவர், சிறந்த நாடாளுமன்ற வாதி, மென்மையானவர், அரசியலில் அடிமட்டத்திலிருந்து வளர்ந்தவர். இவருடைய நாடாளுமன்ற பேச்சுக்கள் நான்கு தொகுதிகளாக புத்தகமாக வெளிவந்துள்ளன. அவை இந்தியாவின் சமகால அரசியலைப் பற்றி சொல்லும் ஆவணங்களாக விளங்குகின்றன.

அயோத்தி பிரச்சினையும், குஜராத்தில் நடந்த கோத்ரா கலவரமும் இவர் இதயத்தை குத்துகின்ற சம்பவங்களாக இருந்தன. அரசியலில் இவருடைய சகாக்களை மதவாத தீவிரவாதிகள் என்று விமர்சிக்கிறவர்கள் கூட வாஜ்பாய் அவர்களை மனம் திறந்து பாராட்டுவார்கள். Right Man in the Wrong Party (தவறான கட்சியில் இருந்த சரியான மனிதர்) என்று பலர் இவரைச் சொல்வதுண்டு.

**இளம் வயதுக் காலத்தில் அத்வானியுடன் வாஜ்பாய்**

தன் இளமைக் காலத்தில் இவரும்



எல்.கே. அத்வானியும் டில்லியில் ஒரு சிறு அறையில் தங்கி, இவர்களே சமைத்து உண்டு, அரசியல் பணிகளை மேற்கொண்டார்கள். தலைவர் என்ற வார்த்தைக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்அவர். மொரார்ஜிதேசாய் பிரதமராக இருந்த ஜனதா ஆட்சிகாலத்தில், வெளியுறவுத்துறை அமைச்சராக வாஜ்பேயி இருந்தார். அப்போது அமெரிக்கா மற்றும் ரஷ்யாவுடன் இந்தியாவிற்கு இருந்த இருநாட்டு உறவுகளை சமச்சீரமைத்தவர் அவர்.

1975 ஆம் ஆண்டு இந்திராகாந்தி அவசரநிலையை பிரகடனம் செய்தபோது அதைத் தீவிரமாக எதிர்த்தவர். வங்க தேச விடுதலைக்கு இந்திராகாந்தி ஆற்றிய பணிகளைப் பாராட்டி எங்கள் துர்க்கா தேவியே என்றும் அழைத்தவர். இப்படி இவருடைய சிறப்புகளைச் சொல்லிக்கொண்டேபோகலாம். 1986லிருந்து 2000வரைக்கும் இவரைச் சந்திக்கக் கூடிய வாய்ப்புகள் எனக்கு அமைந்தன.

டில்லியில் வைகோ அவர்களை கேபினட் அமைச்சர் ஆகவேண்டும் என்ற எண்ணத்துடன், எந்தத் துறை வேண்டும் என்று மட்டும் என்னிடம் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொண்டார் வாஜ்பாய்.

ஆனால், வைகோ வெறும் நான்கு எம்.பிக்களைக் கொண்டு எனக்கு அமைச்சர் பதவி வேண்டாம். தமிழ் நாட்டில் என்னுடைய கட்சியை வளர்க்க வேண்டும் என்றார். அதற்கு பதிலளித்த வாஜ்பாய் ராமகிருஷ்ண ஹெக்டே மூன்றுஎம்.பிக்களைவைத்துக்கொண்டு வர்த்த கத்துறை அமைச்சராக இல்லையா... என்றபோது, வை.கோ. வேண்டவே.. வேண்டாம் என்று தலையசைத்து விட்டார். ஒரு கூட்டணிக் கட்சியை ஒரு பிரதமர்எப்படிமதித்தார்என்று கண்கூடாக அப்போது பார்த்தேன்.

வாஜ்பாய் அவர்களது ஆட்சியில் அரசமைப்புச் சட்டம் மாறுதல் குறித்த நீதிபதி வெங்கடாச்சலைய்யா குழுவில் அல்லது கேபினட் அந்தஸ்தில் உள்ள காதி கிராம வளர்ச்சி வாரியத்தில் தலைவராக என்னை நியமிக்க தன் கைப்பட எழுதிய கடிதத்தை வை.கோ அவர்களின் பரிந்துரையில் கையொப்பமிட்டு ஆல் தி பெஸ்ட் என்று சொல்லி அவருடைய காலை உணவை உண்டு விட்டு, பப்பாளி பழத்தைச் சாப்பிட்டுக் கொண்டே என்னைப் பார்த்து தலை யைசைத்துப் புன்னகைத்த நிமிடங்களை மலரும் நினைவுகளாக எண்ணிப் பார்க்கிறேன்.

பின் 1998 இறுதியில் ஜெயலலிதா மத்திய அரசுக்கு அளித்துவந்த ஆதரவைத்திரும்பப் பெற்றமையால், பொதுத் தேர்தல் வந்தது. இதற்கிடையில் இந்த பொறுப்பு கிடைக்காமல் போனது வேறு விஷயம்.

கடந்த 1998 செப்ரெம்பர் 15 அன்று அண்ணா பிறந்த நாளை எழுச்சி நாள் என்று சென்னைக் கடற்கரையில் வை.கோ. நடத்தினார். அந்த நிகழ்வை முன்னின்று நடத்தும் வாய்ப்புக் கிடைத்தது. அன்றைக்கு பிரதமர் வாஜ்பாய் சென்னைக்கு வருகை தந்திருந்தபோது, விமான நிலையத்தில் வைகோவும் கலைஞரும் சந்தித்தார்கள். 1993ல் தி.மு.கவிலிருந்து வெளியேறிய வை.கோ



மீண்டும் கலைஞர் அவர்களை அன்றைக்குத்தான் சந்தித்தார்.

பிரதமர் வாஜ்பாய்யின் வரவேற்பு நிகழ்ச்சிகள் முடிவடைந்தவுடன், ராஜ்பவன் செல்ல தயாரானார். அப்போது சேது சமுத்திர திட்டம் தொடர்பாக நான் எழுதிய கடிதத்தை வைகோ என்னிடமிருந்து வாங்கி பிரதமரிடம் சேது சமுத்திர கெனல்.... என்று சொல்லி கொடுக்க முயற்சித்தார். அப்போது தன் கைகளைக்காட்டி, கடிதத்தை வைத்துக் கொள்ளுங்கள்.. சேது சமுத்திர திட்டம் பற்றிய மனுதானே... இன்றைக்கு மாலை அதைப்பற்றி அறிவிப்பேன்என வைகோவிடம் சிரித்துக் கொண்டே சொன்னார் வாஜ்பாய்.

**தமிழக உணவுகளில் அலாதியான பிரியம்**

திட்டமிட்டவாறு அன்று மாலை எழுச்சி மிகுந்த கூட்டம் நடைபெற்றது. கூட்ட மேடைக்குப் பின்புறம் தமிழக உணவு வகைகள் சுடச்சுட மணக்கும் வகையில் தயாராகி இருந்தன. மேடைக்குப்பின்புறம் வந்த பிரதமர் வாஜ்பாய் இதைப் பார்த்தவுடன் வைகோவிடம் சாப்பிடலாமா என்று உரிமையுடன் கேட்டு ருசித்துச் சாப்பிட்ட பின், சமையல்காரரைப் பார்த்து நன்றாக இருந்தது என்று சந்தோஷத்தோடு பாராட்டவும் செய்தார்.

இதை தன்னோடு நிகழ்ச்சிக்கு வந்திருந்த எல்.கே. அத்வானி, ஜோர்ஜ் பெர்னாண்டஸ், பாருக் அப்துல்லா, பிர காஷ் சிங் பாதல், வெங்கையா நாயுடு போன்றவர்களிடம் நான் தமிழக உணவுகளை நேசிக்கிறேன். நீங்களும் சாப்பிடுங்கள் என்று சொன்னதையெல்லாம் மறக்க முடியாது.

ஒரு முறை தீப்பெட்டித் தொழில் பிரச்சினைகள் குறித்து சிவகாசி, விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி போன்ற அவ்வட்டார தீப்பெட்டி உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளை அழைத்துக் கொண்டு, டில்லியில் உள்ள பிரதமர் அலுவலகத்திற்கு வைகோ சென்றிருந்தார். அப்போது அவர் சிவகாசி தொகுதியின் நாடாளுமன்றத் தொகுதியின் உறுப்பினராக இருந்தார்.

பிரதிநிதிகளைச் சந்திக்க வந்த வாஜ்பாய் அவர்கள் அனைவரோடும் தேநீர் அருந்திவிட்டு, ஒவ்வொருவர் பெயரையும் கேட்டுத் தெரிந்து கொண்டார். இரண்டு நிமிடத்தில் மனுவை வாங்கிவிட்டு அனுப்பவேண்டிய பிரச்சினையை, ஒரு நாட்டின் பிரதமராக இருந்த நிலையிலும் இருபத்து ஐந்து நிமிடங்கள் எங்களோடு செலவிட்டார்.


**ஈழத் தமிழர் நலனில்...**

ஈழத் தமிழர்கள் பிரச்சினையில், தமிழர்களுக்கு ஆதரவாகவே தம் ஆட்சி காலத்தில் முடிவுகளை மேற்கொண்டார். இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்கும் ஒப்பந்தத்தை நிறுத்தி வைத்ததோடு, எதிர்காலத்திலும் ஆயுத தளவாடங்கள் எதுவும் இலங்கைக்கு அளிக்கக்கூடாது என்று தெளிவான உத்தரவைப் பிறப்பித்தார். இவர் ஆட்சிக் காலத்தில் பம்பாயிலிருந்து இந்தியாவின் போர்க்கப்பல் ஒன்று இலங்கைக்கு அனுப்ப இருந்ததை தடுத்து ஆணையிட்ட இரும்பு மனிதர் .

சுரேஷ் பிரபு தலைமையில் நதிநீர் இணைப்புக்கு ஆய்வுக் குழு அமைத்தது, நாட்டில் இன்றைக்கு எளிதில் பயணிக்க முடிகின்ற தங்க நாற்கரச் சாலைகளை உருவாக்கியது போன்ற பல அரிய சாதனைகளை நாட்டுக்கு அர்ப்பணித்த அற்புத மனிதர்.

1986ம் ஆண்டு மே மாதம் மதுரை பந்தயத் திடலில் டெசோ மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் வாஜ்பாய்யும் கலந்து கொண்டார். அப்போது அவரையும் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த எச்.என். பஹூகுணாவையும் மறுநாள் விடியற்காலையில் மீனாட்சி அம்மன் கோவிலுக்கு அழைத்துச் செல்லவேண் டிய பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப் பட்டது. அப்போது பா.ஜ.கவின் மூத்த தலைவரான ஜனா கிருஷ்ணமூர்த்தியும் உடனிருந்தார்.

அவர்கள் தங்கியிருந்த பாண்டியன்



ஹோட்டலிலிருந்து கோவிலுக்கு அழைத்துச் சென்றுவிட்டு, சித்திரை வீதிகளையும் சுற்றிக் காண்பித்தேன். அங்கிருந்து புறப்படும்போது, வாஜ்பாய் இட்லி, தோசை சாப்பிடலாம் என்றார். உடன் வந்திருந்த பஹூகுணாவும் இந்தியில் சாப்பிடலாமே என்று சொல்ல, காலேஜ் ஹவுஸ் உணவு விடுதிக்கு இருவரையும் அழைத்துச் சென்றேன்.

காலை 9.00 மணியளவில் ஹோட்டலுக்கு வெளியே வந்ததும், எங்களை யாருக்கும் அடையாளம் தெரியாதவாறு அமைதியாக கோவிலைச் சுற்றிக் காண்பித்து, நல்ல உணவையும் சாப்பிட வைத்ததற்கு நன்றி என்றார் வாஜ்பாய். மீண்டும் பாண்டியன் ஹோட்டலுக்குத் திரும்பியபோது வாஜ்பாயிடமும், பஹூகுணாவிடமும் அடுத்தவாரம் நடைபெற இருந்த என்னுடைய திருமண அழைப்பிதழைக் கொடுத்தேன்.

வாஜ்பாய் டில்லிக்குச் சென்ற பின், திருமண நாளான 12-05-1986 அன்று, அதனை நினைவில் வைத்து எனக்கு வாழ்த்துத் தந்தி அனுப்பியிருந்தார். இத்தகைய அன்பான மனிதருக்கு தாமதமாக பாரத ரத்னா வழங்கப்பட்டாலும், பொருத்தமான மனிதருக்கே வழங்கப்பட்டுள்ளது என்று பாரத ரத்னாவுக்குத்தான் பெருமை. *

# அரசமரத்தில் இருக்கும் மருத்துவ பயன்கள்

அரச மரங்கள் பொதுவாகவே அதிக ஒக்ஸிஜன் தருபவை. ஆனால், அவை அதற்கும் மேலாக பல மருத்துவகுணங்களைக் கொண்டுள்ளன. அரச மரத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு மருத்துவ குணங்கள் உள்ளன. அதில் சிலவற்றை இங்கு பார்க்கலாம்.

1. சளி, இருமல் தொல்லையைப் போக்கும்

சளி, இருமல் மற்றும் ஆஸ்துமா உள்ளவர்கள் பாலுடன் 5 அரசமர இலைகளைக் கொதிக்க வைத்து அதனுடன் சீனி சேர்த்துக் குடிக்கலாம்.



2. கண் வலியைக் கட்டுப்படுத்தும்:

அரசமர இலைகளின் சாறைக் கண்களில் தேய்த்தால் கண்களில் உள்ள வலி குறையும்.

3. பற்களுக்கு உகந்தது:

அரசமரத்தின் பச்சை இலைகளைப் பயன்படுத்துவது பற்களுக்கு மிகவும் நல்லது. மேலும், பச்சை இலைகளின் சாறு மூக்கில் ஏற்படும் வலியைக் கட்டுப்படுத்தவும் பயன்படுகிறது.

4. பாதங்களில் இருக்கும் வெடிப்புகளை குணப்படுத்தும்:

அரசமர இலைகளின் சாறை பாதங்கள் மற்றும் கைகளில் உள்ள வெடிப்புகளில் தடவினால், அவை படிப்படியாக குணமாகும்.

5. தீப்புண்ணைச் சரியாக்கும்:

அரசமரத்தின் இலைச் சாறை கொப்புளங்கள், காயங்கள் மற்றும் தீப்புண் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தலாம்.



# திருமணத்திற்கு தயாராகும் பெண்களே!!

திருமணத்திற்கு தயாராகும் பெண்கள் மண நாள் நெருங்கும் வேளையில் அலங்காரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். சில மாதங்களுக்கு முன்பாகவே உணவு பழக்க வழக்கத்தில் சில கட்டுப்பாடுகளை பின்பற்ற வேண்டும். அதுவும் சரும பொலிவை மெருகேற்ற உதவும்.

முக்கியமாக கார உணவுகள், தேநீர், கோப்பி, கொழுப்பு நிறைந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும். பச்சை காய்கறிகள், பழ வகைகளை சாப்பிட்டு வருவது சருமத்தை மெருகேற்ற உதவும். தினமும் 2 முதல் 4 லீற்றர் தண்ணீர் பருக வேண்டும். இது உடல் பருமன், முகப்பரு, சரும வறட்சி போன்ற பிரச்சினைகளில் இருந்து தற்காத்துக்கொள்ள உதவும்.

எண்ணெய் சருமம் கொண்டவர்கள் முல்தானி மெட்டி, உலர்ந்த தோடம்பழத் தோல், சந்தன தூள் ஆகியவற்றை மிக்சியில் அரைத்து வாரம் இருமுறை முகத்தில் பூசி வரலாம். பன்னீருடன் தேயிலைச் சாயத்தை சிறிதளவு கலந்து முகத்தில் மசாஜ் செய்து குளிர்ந்த நீரில் கழுவுவதும் நல்லது. வறண்ட சருமம் கொண்டவர்கள் 2 மேசைக் கரண்டி ஓட்ஸ், ஒரு தேக்கரண்டி பொடித்த பாதாம் மற்றும் சந்தன எண்ணெய் ஆகியவற்றுடன் சிறிதளவு தண்ணீர் சேர்த்து பிசைந்து மசாஜ் செய்து, நீரில் கழுவி வரலாம்.



தென் அமெரிக்காவில் காணப்படும் இவ்வகை பூனைகளே பூனையினத்தின் மிகச் சிறியவையாகும். இவை பெரும்பாலும் சிலி மற்றும் அர்ஜென்டினாவில் காணப்படும் அரிய வகை விலங்கினமாகும் . நன்கு வளர்ந்த இந்தபூனையின் எடை 2 கிலோகிராம், 40- 50 உது உயரம் தான். (அழியும் தருவாயில் உள்ள விலங்கு)

## புள்ளிகளை இணையுங்கள்!!



# குழந்தைகளுக்கு விருப்பமான நூடில்ஸ் கட்லெட்

தேவையான பொருள்கள் :
நூடில்ஸ் - 2 கப்
உருளைக்கிழங்கு - 2
பொடியாக நறுக்கிய கரட் - ஒன்று
மிளகாய்த்தூள் - அரை தேக்கரண்டி
உப்பு -தேவையான அளவு
மிளகுத்தூள் - அரை தேக்கரண்டி
சோயா சோஸ் - ஒரு தேக்கரண்டி
வெங்காயத்தாள் - 1 கட்டு
பூண்டு - 4 பல்,
இஞ்சி - சிறிது துண்டு,
பச்சைமிளகாய் - 2,
செஷ்வான் சாஸ் - 2 தேக்கரண்டி
மைதா மாவு - 3 தேக்கரண்டி
எண்ணெய் - தேவையான அளவு.

செய்முறை :

நூடில்ஸில் கால் பங்கை நன்றாக நொறுக்கி வைக்கவும்.

மீதமுள்ள முக்கால் பாகம் நூடுல்ஸை வேக வைத்துக் கொள்ளவும்.

உருளைக்கிழங்கை வேக வைத்த நன்றாக மசித்து கொள்ளவும்.

மாவை சிறிதளவு தண்ணீர் சேர்த்து நன்றாக கலந்து கொள்ளவும்.

கரட், வெங்காயத்தாள், பூண்டு, இஞ்சி, மிளகாயை பொடியாக நறுக்கி கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் வேக வைத்த நூடில்ஸ், மசித்த உருளைக்கிழங்கு, கரட், இஞ்சி, நூடில்ஸ் மசாலா, பூண்டு, பச்சைமிளகாய், வெங்காயத்தாள், செஷ்வான் சோஸ், சோயா சோஸ், உப்பு, மிளகுத்தூள், மிளகாய்த்தூள் சேர்த்து நன்றாகக் கலந்து கொள்ளவும்.

நொறுக்கிய நூடில்ஸை ஒரு தட்டில் கொட்டிக் கொள்ளவும்.

கலந்த கலவையை விருப்பமான வடிவில் பிடித்து மாவில் தோய்த்து நொறுக்கி வைத்துள்ள நூடில்ஸில் பிரட்டி வைக்கவும். இவ்வாறு அனைத்து மாவையும் செய்து வைக்கவும்.

சட்டியை அடுப்பில் வைத்து பொரிப்பதற்குத் தேவையான எண்ணெய் ஊற்றி சூடானதும் செய்து வைத்த கட்லெட்களை போட்டு பொரித்து எடுத்து பரிமாறவும்.

**சுவை மிகுந்த 'கட்லெட்' தயார்.**



# கருமியின் ஆசையால் விபரீதம்!



ஒருமுறை கீழாநெல்லி என்ற ஊரில் இருந்த ஆற்றில், ஓடக்காரர் ஓடத்தை ஓட்டிக் கொண்டிருந்தார். அந்த ஓடத்தில் கருமியும், எண்ணெய் வியாபாரி ஒருவரும் அமர்ந்திருந்தனர்.

ஓடம் நதியின் நடுவே சென்ற நேரத்தில், முதலை ஒன்று ஓடத்தை வழி மறித்தது. தன் வாயை, ஆ வென பிளந்து காட்டியது.

முதலையைக் கண்டதும் மூவரும் திடுக்கிட்டனர். வாயைப் பிளந்த முதலை மூவரையும் நோக்கியது.

நான் மிகவும் பசியோடு இருக்கிறேன். எனவே, உங்கள் மூவரில் ஒருவர் எனக்கு இரையாகிட வேண்டும். மூவரில் யார் இரையாகப் போகிறீர்கள் என்பதை நீங்களே தீர்மானம் செய்து கொள்ளுங்கள், என்றது.

உடனே ஓடக்காரர் அழ ஆரம்பித்தார்.

ஐயோ! நான் என்ன செய்வேன்! என்னை நம்பி என் குடும்பத் தார்கள் இருக்கிறார்கள். என்னை முதலை விழுங்கி விட்டால், அவர்களின் கதி அதோகதியாகிவிடும், என்றார்.

இதனைக் கேட்ட எண்ணெய் வியாபாரியோ, என் பெண்ணுக்கு திருமண ஏற்பாடு செய்துள்ளேன். நான் முதலைக்குப் பலியாகி விட்டால், அவளது திருமணம் நின்றுவிடும். அவள் வாழ்க்கையே கேள்விக் குறியாகிவிடும், என்றார்.

உடனே கருமி, ஐயோ! அம்மா! என்று தன் வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டார்.

என் பணமெல்லாம் யார் அனுபவிப்பார்கள்! இப்போது கூட என் மடி நிறைய பணம் இருக்கிறது. முதலை என்னை விழுங்கினால் இந்தப் பணமும் முதலையின் வாயில் சென்று விடுமே!

நான் இறக்க மாட்டேன். இங்கிருந்து தப்பித்துச் சென்றிடுவேன். நீங்கள் இருவரில் ஒருவர் முதலைக்கு இரையாகுங்கள், என்றார்.

அந்நேரம் முதலை ஓடத்தின் மீது பாய்ந்து கருமியை விழுங்கிய பின்னர் மற்ற இருவரையும் பார்த்தது.

வியாபாரியே! நீ உன் மகளுக்காக வாழ்கிறாய்! ஓடக்காரர், மனைவி, மக்களுக்காக வாழ்கின்றார். நீங்கள் இருவரும் மற்றவர்களுக்காக வாழ்வதால் உங்களை விட்டு வைத்தேன்.

இந்தக் கருமி பணத்திற்காக வாழ்ந்ததால் அவரை விழுங்கினேன், என்றது முதலை.

முதலையின் பதிலைக் கேட்டு உறைந்து போயினர்.

# ஜனநாயகமும், சுதந்திரமும் உறுதிப்படுத்தப்பட்ட தேசமாக இலங்கையை கட்டியெழுப்புவதே அரசின் முந்திய நோக்கம்

கொழும்பு, ஓக.18

பிரதான கட்சிகளை ஒன்றிணைத்து மக்களின் பிரச்சினைகளைத்தீர்த்துவளர்ச்சிகண்ட ஜனநாயகமும், மனித சுதந்திரமும் உறுதிப்படுத்தப்பட்ட தேசமாக இலங்கையை கட்டியெழுப்புவது அரசின் நோக்கமாக இருந்தது .

இதற்காக சமாதானம், நல்லிணக்கம், அபிவிருத்தி ஆகிய வற்றைமூலாதாரமாகக்கொண்டு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டன என அரசு தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த செய்திக்கு குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு–


அரசு தகவல் திணைக்களம் தகவல்

எதிர்கால நலன்கருதி இலட்சியங்களை அடையும் நோக்கத்துடன் தகுந்த அடித்தளத்தில் வேலைத்திட்டங்கள் கட்டியெழுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலுக்குப்பின்னர் ஆட்சிப்பீடம் ஏறிய அர சுக்கு ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மக்கள் ஆணை கிடைத்தது.

மக்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளின் அனுகூலங்களை மக்கள் அனுபவிக்கிறார்கள். சர்வதேச சமூகம் இலங்கை மீது நம்பிக்கையுடன் செயற்படுகின்றமை மற்றொரு வெற்றியாகும். ஐரோப்பிய ஒன்றியம் மீன் ஏற்றுமதி தடையைநீக்கியது. இலங்கைக்கு மீண்டும் ஜிஎஸ்பி வரிச்சலுகை கிடைத்தது.

சுயாதீன ஆணைக்குழுக்களை அமைத்து ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்காக சட்ட திட்டங்கள் வலுவாக்கப்பட்டன. குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்வோருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

கம்பெரலிய, என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா முதலான திட்டங்கள் மூலம் உற்பத்தி அதிகரித்து, இளம் தலைமுறைக்கு வேலை வாய்ப்பு கிடைத்தது.

முன்னைய அரசின் மூலம் நாட்டின்மீது சுமத்தப்பட்ட பெரும் கடன் சுமையை முறையாக நிர்வகித்து பொருளாதாரத்தை வழி நடத்த வேண்டிய சவாலை அரசு சமாளிக்க வேண்டியிருந்தது.

மொரகஹந்த நீர்ப்பாசன திட்டம்குறிப்பிடத்தக்கஒன்றாகும். வீடமைப்பு, விவசாயம், சுற்றுலா முதலான சகல துறைகளிலும் நாட்டைமுன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்ல அரசால் முடிந்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

# போதைப்பொருள் வர்த்தகம் காரணமாகவே கடினமான முடிவை எடுக்க நேரிட்டுள்ளது!

## அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவிப்பு

கொழும்பு, ஓக.18

சிறைச்சாலையினுள் இருந்தவாறு பாதாள குழுவை செயற்படுத்துவோரின் தேவைக்காக, இயங்கும் போதைப்பொருள் வர்த்தகம் காரணமாக, கடினமான முடிவை எடுக்க நேரிட்டுள்ளது என அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

சிறைச்சாலையில், சிறைச்சாலை பொலிஸ் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறைச்சாலை நடவடிக்கை தொடர்பில், அதனை சட்ட பூர்வமான ஓர் அலகாக்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை வரலாற்றில் இப்பிரிவு அமைக்கப்படுவது இதுவே



முதல் தடவையாகும். சிறைச்சாலை புலனாய்வு பிரிவு கடந்த 2010 இல் நிறுவப்பட்டது.

8 ஆண்டுகள் வரை, அவர்கள் மேற்கொள்ளும் தீவர சோதனைகள் தொடர்பில் யாரும் பொறுப்புடையவர்களாக இருக்கவில்லை. இதன் காரணமாக, உயர் அதிகாரிகளின் தேவைக்கேற்ப அல்லது சுற்றியுள்ள அரசியல்வாதிகளின் தேவைக்கேற்ப அது நிறுத்தப்பட்டது.

அது தவறு, சிறைச்சாலையினுள் அதிகாரிகள் செயற்படுவோர், சிறந்த ஒழுக்க விழுமியங்களைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில், சிறைச்சாலையில் இருப்போர், சமூகத்தில் சாதாரண சூழலில் வாழ்வோரல்லர்.

அவர்கள் மனதளவிலான உணர்வுகளைக் கொண்ட ஏனையோரைப் போன்று உரிமைகளை ஒரேயளவில் பெறும் பிரிவினராக்கப்பட வேண்டும்.

இதேவேளை, அண்மைக்காலமாக, சிறைச்சாலையினுள் இருந்தவாறு பாதாள குழுவைச் செயற்படுத்துவோரின் தேவைக்காக, இயங்கும் போதைப்பொருள் வர்த்தகம் காரணமாக, இந்நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில், பெரிய முடிவை எடுக்க நேரிட்டது.

இதன் காரணமாக, எனது சில அதிகாரிகளுக்கு மரண அச்சுறுத்தல் எழ ஆரம்பித்துள்ளது. அவ்வாறான அனைத்திற்கும் முகம் கொடுத்தவாறு, நாம் அமைச்சு மற்றும் திணைக்களமாக முடிவுகளை எடுப்போம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

# ரயில் பெட்டிகளை நவீனமயமாக்கும் வேலைத்திட்டம்!



உள்நாட்டு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ரயில் பெட்டிகளை நவீனமயப்படுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ரயில் பெட்டிகளை நவீனமயப்படுத்தும் பணிகள் இடம்பெறும் இரத்மலானை பிரதேசத்திற்கு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று விஜயம் செய்தார்.

பயன்படுத்தாத நிலையில் காணப்படும் 200 ரயில் பெட்டிகள் நவீனமயப்படுத்தப்படவுள்ளன. உள்நாட்டு பொறியியலாளர்களின் வழிகாட்டலின் கீழ் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிலிருந்து ரயில் பெட்டியொன்றை இறக்குமதி செய்ய ஆறு கோடி ரூபா செலவாகிறது. ரயில் பெட்டியொன்றை இலங்கையில் நவீனமயப்படுத்த நான்கு கோடி 50 லட்சம் ரூபா மாத்திரமே செலவாகிறது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நவீனமயப்படுத்தப்பட்ட 12 ரயில் பெட்டிகள் களனிவழி ரயில் பாதையில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. மேலதிக ரயில் பெட்டிகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# இன்னாசிக்குளத்தின் புனரமைப்பு பணிகளை பார்வையிட்ட பச்சிலைப்பள்ளி தவிசாளர்!



பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுரேன் வண்ணாங்கேணி, தம்பகாமம் இன்னாசிக்குளத்தின் புனரமைப்பு பணிகளை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் பணிப்பின் பேரில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் இந்தப் பகுதிக்குச் சென்றுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் வேண்டுகோளுக்குஅமைவாக தேசிய நல்லிணக்க செயலணியால் (ONUR) 16 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு இக்குளத்தின் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்போது, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உபதவிசாளர் கஜன் உறுப்பினர் ரமேஸ், கோகுல்ராஜ் மற்றும் கமக்கார அமைப்புக்களின் சம்மேளன தலைவர் செல்வராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருமலையில் சர்வதேச ஆராய்ச்சி மாநாடு!



திருகோணமலையில் மூன்றாவது 'சர்வதேச ஆராய்ச்சி மாநாடு' திருகோணமலை வளாக முதல்வர் கலாநிதி வீ.கனகசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

கிழக்குபல்கலைக்கழகத்தின்திருகோணமலை வளாகத்தின் அனுசரணையில் திருகோணமலை வளாக கேட்போர் கூடத்தில் நேற்று முந்தினம் ஆரம்பமான இந்த ஆராய்ச்சி மாநாடு நேற்று வரை இரு தினங்களாக நடைபெ ற்றது.

சர்வதேசஆராய்ச்சிமாநாட்டில்உள்ளூர் வளங்களையும், ஆற்றலையும் சர்வதேசத்துடன் இணைத்து கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தியை மேம்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டது. ஜப்பான், இங்கிலாந்து, இந்தியா மற்றும் பல நாடுகளைச்சேர்ந்த ஆராய்ச்சியாளர்களும், இலங்கை பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்களும் இணைந்து இந்த ஆராய்ச்சி மாநாட்டை நடத்தினர்.

இந்த நிகழ்வில் ஜப்பான், இங்கிலாந்து, இந்தியா மற்றும் பல நாடுகளைச்சேர்ந்த ஆராய்ச்சியாளர்களது பல ஆராய்ச்சி கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இளைஞர் அபிவிருத்தி , சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் விவசாயத்துறை, கடல்சார் வள அபிவிருத்தி போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

இந்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி ஜெயசிங்கம் மற்றும் கிழக்கு மறைமாவட்ட ஆயர் இமானுவேல், கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

# ஒசுசல மருந்தகம் வடக்கு மக்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம்

## பிரதியமைச்சர் பைசல் காசிம்!

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட ஒசுசல மருந்தகம் வடக்கு மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகுமென பிரதியமைச்சர் பைசல் காசிம் தெரிவித்துள்ளார்.

ஒசுசல மருந்தகத்தின் ஊடாக குறைந்த விலையில் 48 மருந்துவகைகளைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் பிரதியமைச்சர் கூறியுள்ளார்.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வைபவங்களில் உரையாற்றுக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

# ஐ.நாவின் தடையை மீறிய ரஷ்ய, சீன நாட்டு நிறுவனங்கள் மீது அமெரிக்கா நடவடிக்கை!

வொஷிங்டன், ஒக.18

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் விதித்த பொருளாதார தடைகளை மீறிய ரஷ்ய, சீன நிறுவனங்கள்மீது பொருளாதார தடை விதித்து அமெரிக்கா நடவடிக்கை எடுத்து உள்ளது.

வடகொரியா, உலக நாடுகளின் கடும் எதிர்ப்பை மீறியும், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் விதிமுறைக்கு மாறாகவும் அணுக் குண்டு சோதனைகளையும், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனைகளையும் நடத்தி வந்தது.

இதற்காக வடகொரியா மீது ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கடுமையான பொருளாதார தடைகளை விதித்தது.

இந்த நிலையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் விதித்த பொருளாதார தடைகளை மீறி வடகொரியாவுடன் ரஷ்ய நிறுவனமும், சீன நிறுவனங்களும் வர்த்தக உறவு கொண்டு இருந்தது அம்பலத்துக்கு வந்து உள்ளது.

இதையடுத்து ரஷ்யாவின் பிராபினட் பீட்டி நிறுவனத்தை அமெரிக்காவின் டிரம்ப் நிர்வாகம் கருப்பு பட்டியலில் சேர்த்து பொருளாதார தடை விதித்து நடவடிக்கை எடுத்து உள்ளது.

இதேபோன்று சீனாவின் டாலியன்சன்மூன்ஸ்டார்இன்டர் நேனல் லாஜிஸ்டிக்கல் டிரேடிங் கம்பெனி, அதன் சிங்கப்பூர் கிளை நிறுவனம் மீதும் அமெரிக்கா நடவடிக்கை எடுத்து இருக்கிறது.

சிங்கப்பூரில் நடந்த உச்சி மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பும், வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன்னும் சந்தித்து பேச்சு நடத்தினர். அப்போது, வடகொரியா அணு ஆயுத திட்டங்களை முழுமையாக முடிவுக்கு கொண்டு வர சம்மதித்து அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி, வடகொரியா நடந்து கொள்ளவேண்டும்என்றுஅமெரிக்கா தொடர்ந்து அழுத்தம் தந்து வருகிறது.

இந்த நிலையில் இப்போது வடகொரியாவுடன் வர்த்தக உறவு கொண்டிருந்த ரய, சீன நிறுவனங்களை அமெரிக்கா கறுப்புபட்டியலில்சேர்த்துபொருளாதார தடை விதித்து இருப்பது, அமெரிக்கா தன் நிலைப்பாட்டில் உறுதியுடன் இருப்பதையே காட்டுகிறது.

# வாஜ்பாயின் மறைவுக்கு பாகிஸ்தான் அரசு இரங்கல்



இஸ்லாமாபாத்,ஒக.18

உடல்நலக்குறைவு காரணமாக உயிரிழந்த இந்தியாவின் முன்னாள்பிரதமர்வாஜ்பாயின் மறைவுக்கு பாகிஸ்தான் அரசு இரங்கல் தெரிவித்துள்ளது.

பா.ஜ.க கட்சியின் பிதாமகனும், இந்தியாவின் மிக மூத்த அரசியல்தலைவருமான அடல் பிஹாரி வாஜ்பாய் தனது 93 ஆவது வயதில் நேற்று முன்தினம் டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் காலமானார். மிகச் சிறந்த பேச்சாளரும், கவிஞரும், மாபெரும் அரசியல் ஞானம் பெற்ற தலைவருமான இவரது மறைவுக்கு இந்திய முழுவதும் துக்கம் அனுசரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாரத ரத்னா வாஜ்பாயின் மறைவுக்கு பாகிஸ்தான் அரசு இரங்கல் தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் அரசு தெரிவித்த இரங்கல் செய்தியில், இந்தியா பாகிஸ்தான் உறவை மேம்படுத்துவதில் இவரது பங்கு மகத்துவமானது என்றும், சார்க் கூட்டமைப்பின் முக்கிய ஆதரவாளர்களில் ஒருவருமான வாஜ்பாயின் மறைவு வருத்தம் அளிக்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாகிஸ்தான் அரசும் மக்களும், வாஜ்பாயை இழந்துதவிக்கும்அவரதுகுடும்பத்தினருக்கும், இந்திய மக்களுக்கும் தங்களது இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது என அந்த இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிரபல அமெரிக்க பாடகி மரணம்



பிரபல அமெரிக்க கிளாசிக் பாடகி அரேத்தா ஃப்ராங்ளின் உடல்நலக் குறைவால் நேற்று முன்தினம் அவரது இல்லத்தில் உயிரிழந்தார்.

ஹாலிவுட் நட்சத்திரமாக முடிசூட்டப்பட்டவரும் பாரமரிய மான கிளாசிக் பாடல்களை பாடியவருமானஅரேத்தாஃப்ராங்ளின்தனது 76 வயதில் உடல் நலக்குறைவு காரணமாக நேற்று முன்தினம் காலமானார்.

சிறுவயது முதலே பாடல்களை பாடி உலகம் முழுதும் அமெரிக்காவின் கலாச்சார சின்னமாக விளங்கிய அவர் 18 கிராமி விருதுகள் பெற்றுள்ளார். 1987 ஆம் ஆண்டு ராக் அண்ட் ரோல் வாழ்த்தரங்கில் பங்கேற்ற முதல் பெண் எனும் பெருமையை அவர் பெற்றுள்ளார்.

கணைய புற்றுநோய் காரணமாக தனது இசைப்பயணத் தில் இருந்து கடந்த வருடம் ஓய்வுபெற்ற இவர், நேற்று முன்தினம் அவரது வீட்டில் காலமானார். அமெரிக்க மக்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் என அனைவரும் அரேத்தாவைதங்களுள் ஒரு சகாவாகவே பார்த்தனர்.

பில் கிளிண்டன் மற்றும் ஜிம்மி கார்ட்டர் போன்ற அமெரிக்க ஜனாதிபதிகளின் பதவி யேற்பு விழாவில் அரேத்தா பாடல்களை பாடியுள்ளார். இவருக்கு நாட்டின் உயர்ந்த விருதாக குடிமக்களுக்கு வழங்கப்படும் ஜனாதிபதி விருதை கடந்த 2005ஆம் ஆண்டுஅப்போதைய ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் வழங்கி கௌரவித்தார்.

கிட்டத்தட்ட 1960 களில் இருந்து 50ஆண்டுகளுக்கும்மேல்இசைத் துறையில் காலத்தால் அழியா படைப்புக்கள் பலவற்றை அளித்த இவரது மறைவு அமெரிக்க மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஒபாமா உட்பட பலரும் அரேத்தாஃப்ராங்ளினின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# பயங்கரவாதிகள் தாக்குதல் எதிரொலி; ஆப்கனில் 1000 பாடசாலைகள் மூடல்



காபூல், ஒக.18

பயங்கரவாதிகள் தாக்குதல் எதிரொலி யாக ஆப்கானிஸ்தானில் நாடு முழுவதும் 1000 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டு விட்டன.

ஆப்கானிஸ்தானில் பாடசாலைகள், கல்லூரிகள் மீது சமீப காலமாக பயங்கர வாதிகள் தாக்குதல் நடத்த தொடங்கி உள்ளனர். இந்த ஆண்டில் இதுவரை 86 கல்வி நிறுவனங்கள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தி பெருத்த சேதத்தை ஏற்படுத்தி உள்ளனர்.

கடைசியாக கடந்த புதன்கிழமை காபூலில் உள்ள தனியார் டியூன் மையம் ஒன்றில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 48 மாணவர்கள் கொல்லப்பட்டனர். 67 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு பொறுப்பு ஏற்றது.

இப்படி கல்வி நிறுவனங்கள் தொடர் தாக்குதலுக்கு ஆளாகி வருவது மக்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் அங்கு நாடு முழுவதும் 1000 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டு விட்டன. பாதுகாப்பு காரணங்களையொட்டி அவை மூடப்பட்டு உள்ளன என தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதுபற்றி ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சர் வாயிஸ் அகமது பர்மாக் கூறும்போது,

கல்வி நிறுவனங்கள் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்துவது, இப்போது நமது நாடு சந்தித்து வருகிற மிக பயங்கரமான தாக்குதல்கள் என்றுதான் கூற வேண்டும் என்று குறிப்பிட்டார்.

# சவூதி தற்கொலைப்படை பயங்கரவாதி கைது!

சவூதி அரேபிய நகரத்தில் தற்கொலைபடை பயங்கரவாதி பவாஸ் அப்துல் ரகுமானை பொலிஸார் கைது செய்தனர்.

சவூதி அரேபிய நகரம் அல்புக்கரியா. இந்த நகரத்தில் கடந்த புதன்கிழமை அதிகாலை 1.30 மணிக்கு சந்தேகத்துக்கு இடம் அளிக்கிற வகையில் ஒருவரை பொலிஸ் அதிகாரிகள் கண்டனர். அவன் இடுப்பில் வெடிகுண்டுகள் பொருத்திய 'பெல்ட்' அணிந்து வந்த தற்கொலைப்படை பயங்கரவாதி என பொலிஸார் அதிகாரிகள் சந்தேகித்தனர்.

அவனை அவர்கள் கைதுசெய்ய முயற்சித்தபோது, அவர்களை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டு விட்டு அவன் தப்பினான். ஆனால் பொலிஸ் அதிகாரிகள் விடாமல் துரத்தினர்.

அதைத் தொடர்ந்து அவன், அந்த நகர சந்தையில் காரில் இருப்பதை பொலிஸ் அதிகாரிகள் கண்டனர். தன்னை பொலிஸ் அதிகாரிகள்பார்த்துவிட்டார்கள்என்பதை உணர்ந்ததும் அவன் மறுபடியும் அவர்களை நோக்கி துப்பாக்கியால் சரமாரியாக சுட்டான். பொலிஸ் அதிகாரிகளும் அவனை திருப்பிச் சுட்டனர். இதில் அவன் குண்டு பாய்ந்து படுகாயம் அடைந்தபோது, அவனை சுற்றி வளைத்து கைது செய்தனர்.

அவன் உடனடியாக அங்கு உள்ள வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டான்.

அவன் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் கொள்கைகளால் கவரப்பட்டவன் என்றும், அவனது பெயர் பவாஸ் அப்துல் ரகுமான் எனவும் தெரிய வந்து உள்ளது. அவனிடம் இருந்து ஒரு எந்திர துப்பாக்கி, 359 தோட்டாக்கள், ஒரு கைத்துப்பாக்கி ஆகியவை கைப்பற்றப்பட்டு உள்ளன.

இந்த சம்பவம், அந்த நகரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# லிபியா முன்னாள் ஜனாதிபதி கடாபியின் 45 ஆதரவாளர்களுக்கு மரணதண்டனை!



திரிபோலி, ஒக.18

லிபியாமுன்னாள்ஜனாதிபதி கடாபி ஆதரவாளர்கள் 45 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு அரபு நாடுகள், ஆபிரிக்காவின் வடபகுதி நாடுகள் ஆகியவற்றில் திடீர் புரட்சி ஏற்பட்டது. இதில் சில நாடுகளில் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. சில நாடுகள் ஆட்சியை தக்க வைத்துக் கொண்டன.

லிபியா நாட்டில் நீண்ட காலமாக முகமது கடாபி ஆட்சியில் இருந்து வந்தார். அங்கும் புரட்சி ஏற்பட்டது. புரட்சியாளர்கள் நாட்டை கைப்பற்றிக் கொண்டனர். கடாபி புரட்சிக்கும்பலிடம் சிக்கினார். அவர்கள் அவரை அடித்து கொன்றார்கள்.

ஜனாதிபதிக்கு எதிராக திரிபோலி நகரில் போராட்டம் நடந்து கொண்டிருந்தபோது அவர்களை ஒடுக்குவதற்கு ராணுவமும், கடாபியின் ஆதரவாளர்களும் கடும் தாக்குதலில் ஈடுபட்டார்கள். இதில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு கடாபிக்கு ஆதரவாக செயல் பட்டவர்கள் மீது புதிய ஆட்சியாளர்கள் நடவடிக்கை மேற்கொண்டனர். புரட்சியின் போது பொது மக்கள் மீது தாக்குதல் நடத்திய கடாபி ஆதரவாளர்களை கைது செய்தனர்.

அதில் 128 பேர் மீது கொலை குற்றம்சாட்டப்பட்டது. அவர்கள் மீதான வழக்கு திரிபோலி கோர்ட்டில் நடந்து வந்தது. அதில் 99 பேருடைய குற்றம் உறுதி செய்யப்பட்டது. அவர்களில் 45 பேருக்கு மரண தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பு கூறினார். மற்றவர்களுக்கு பல்வேறு விதமான சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது

காலைக்கதிர் Kalaikkathir



# பெரும் தலைவர் வாஜ்பாய் உடலுக்கு அரசியல் பிரபலங்கள் பலரும் அஞ்சலி!





புதுடில்லி, ஓக.18

முன்னாள் பிரதமர் வாஜ்பாய் உடலுக்கு முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட பல தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

பா.ஜ.கவை தோற்றுவித்தவரும் முன்னாள் பிரதமருமான அடல் பிஹாரி வாஜ்பாய் (வயது 93) டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் காலமானார். அவரது மறைவுக்கு ஜனாதிபதி, பிரதமர், மாநில முதல்வர்கள், அரசியல் கட்சி தலைவர்கள், கலை உலக பிரபலங்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு கொண்டு வரப்பட்ட உடலுக்கு குடும்பத்தினர் அஞ்சலி செலுத்தினர். அவரது உடலில் தேசியக்கொடி போர்த்தப்பட்டு அஞ்சலிக்காக கண்ணாடி பேழையில் வைக்கப்பட்டுள்ளது. குடும்ப உறுப்பினர்கள் முதலில் அஞ்சலி செலுத்தினர்.

இதனை அடுத்து, ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த், துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, பிரதமர் மோடி, பா.ஜ.க தேசிய தலைவர் அமித்ஷா, மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத் சிங், சுஷ்மா ஸ்வராஜ், முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

மேலும், மத்திய அமைச்சர்கள், மாநில முதல்வர்கள், தேசிய கட்சிகளின் தலைவர்கள் முன்னாள் அமைச்சர்கள் அஞ்சலி செலுத்தினர்.

# மதச்சார்பின்மையை பாதுகாத்தவர் வாஜ்பாய்!

## அஞ்சலி செலுத்திய பின் வைகோ பேட்டி



மறைந்த இந்திய முன்னாள் பிரதமர் வாஜ்பாய் உடலுக்கு அஞ்சலி செலுத்திய வைகோ நிருபர்களிடம் பேசுகையில், மதச்சார்பின்மையைப் பாதுகாத்தவர் வாஜ்பாய் எனக் குறிப்பிட்டார்.

முன்னாள் பிரதமர் வாஜ்பாய் உடலுக்கு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். பின்னர் வாஜ்பாய் குறித்த நினைவலைகளை செய்தியாளர்களிடம் பகிர்ந்து கொண்டார்.

அப்போது அவர் தெரிவித்தவை வருமாறு–

என் மீதும் தமிழ் மீதும் அதிக பாசம் வைத்திருந்தவர் வாஜ்பாய். தந்தை போன்று என் மீது அன்பு வைத்திருந்தவர். நான் டில்லி செல்லும்போதெல்லாம் அவரது வீட்டிற்குச் செல்வேன்.

வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது எனக்கு அமைச்சர் பதவி தருவதாக சொன்னார். நான் வேண்டாம் என்று கூறி விட்டேன். மதச்சார்பின்மையை பாதுகாத்தவர் வாஜ்பாய். கூட்டணி ஆட்சி எப்படி நடத்தவேண்டும் என்பதற்கு உதாரணமாக திகழ்ந்தார் என்றும் வைகோ கூறினார்.

# ஆறுதல் பெற முடியாமல் தவிக்கிறோம்; வாஜ்பாயின் மறைவு தொடர்பில் தமிழிசை



வாஜ்பாய் மறைவால் ஆறுதல் பெற முடியாமல் தவிக்கிறோம் என டில்லியில் அவருக்கு அஞ்சலி செலுத்திய பின் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வளர்ச்சி திட்டங்களின் நாயகன் வாஜ்பாய் என புகழாரம் சூட்டினார்.

'நாட்டை வல்லரசாக்குவதற்கு பிள்ளையார் சுழி போட்டவர் வாஜ்பாய். பன்முகத்தன்மை கொண்ட வாஜ்பாய் போன்ற தலைவரை இனிமேல் பார்க்க முடியுமா என தெரியவில்லை. அவருக்கு அஞ்சலி செலுத்திய போதும், ஆறுதல் பெற முடியாமல் தவிக்கிறோம்' என்றும் தமிழிசை சவுந்தரராஜன் கூறினார்.

# ராகுல் காந்தி அஞ்சலி

மறைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாய் உடலுக்கு காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி அஞ்சலி செலுத்தினார்.

டில்லியில் உள்ள வீட்டில் வைக்கப்பட்ட வாஜ்பாய் உடலுக்கு நாடு முழுவதிலும் இருந்து வந்து தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

இந்நிலையில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி நேற்றுக் காலை வாஜ்பாய் இல்லத்திற்கு வந்து, அவரது உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.



இதேபோல் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், ராணுவ தளபதி பிபின் ராவத், கடற்படை தளபதி சுனில் லம்பா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் ஆகியோரும் வாஜ்பாய்க்கு அஞ்சலி செலுத்தினர்.

# கேரளாவில் கடும் மழை தொடர்கிறது: லட்சக்கணக்கான மக்கள் முகாம்களில்!

## உயிரிழந்தோர் எண்ணிக்கை 164 ஆக உயர்வு



கேரளாவில் சமீபத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 164 ஆக உயர்ந்துள்ளது என முதலமைச்சர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

கேரளாவில் தென்மேற்கு பருவமழை கடந்த சில நாள்களாக பெய்து வருகிறது. கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பெய்து வரும் இந்த மழையால் மாநிலத்தின் 14 மாவட்டங்களிலும் மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கிப்போய் உள்ளது.

திருவனந்தபுரம் மாவட்டம் உள்பட மாநிலத்தின் பல இடங்களில் கன மழை பெய்து வருகிறது. மாநிலத்தின் அணைகள் முழுவதும் நிரம்பி உள்ளன. எனவே 35 அணைகளில் இருந்து உபரிநீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இதனால் தாழ்வான பகுதிகள் அனைத்தும் நீரில் மூழ்கி உள்ளன.

இதுவரை 97 பேர் வெள்ளத்தாலும், நிலச்சரிவாலும் உயிரிழந்துள்ளனர். லட்சக்கணக்கான மக்கள் வீடுகளையும், உடைமைகளையும் இழந்து, நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், கேரளாவில் சமீபத்தில் பெய்து வரும் கன மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 164 ஆக உயர்ந்துள்ளது என முதல் மந்திரி பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில், கேரளாவில் கனமழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் பலியானோரின் எண்ணிக்கை 97 இல் இருந்து 164 ஆக அதிகரித்துள்ளது. காசர்கோடு மாவட்டத்தை தவிர 13 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

மீட்பு பணிக்காக கூடுதலாக இந்திய கடற்படைக்கு சொந்தமான 4 கப்பல்கள் கொச்சி வந்துள்ளன. இந்த மீட்புக்குழுவில் இந்த கப்பலில் வந்த கடற்படையினரும் இணைய உள்ளனர். நிவாரணப் பொருள்களும் கப்பல் மூலமாக கொண்டுவரப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வாஜ்பாய் உடலுக்கு பூட்டான் மன்னர், வெளிநாட்டு தலைவர்கள் மலரஞ்சலி!



டில்லி பா.ஜ.க. அலுவலகத்தில் வைக்கப்பட்ட முன்னாள் பிரதமர் வாஜ்பாய் உடலுக்கு நேற்று வெளிநாட்டு தலைவர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

டில்லி பா.ஜ.க. தலைமை அலுவலகத்தில் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்ட வாஜ்பாய் உடலுக்கு அங்கு ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர்.

பூட்டான் மன்னர் ஜிக்மே கேசர் நாம்கியேல் வாங்சுக், ஆப்கானிஸ்தான் அதிபர் ஹமித் கர்சாய், நேபாள நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் கியாவலி, இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் (பொறுப்பு) லக்ஷ்மன் கிரியெல்லா, வங்காளதேசம் நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல் ஹசன் மஹ்மூத் அலி மற்றும் பாகிஸ்தான் நாட்டின் சட்டத்துறை அமைச்சர் அலி சபார் உட்பட பலர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

# வாஜ்பாயின் இறுதி ஊர்வலத்தில் 4 கி.மீ. நடந்தே சென்ற மோடி, அமித்ஷா!

டில்லி, ஓக.18

பிரதமர் நரேந்திர மோடி, பா.ஜ.க. தலைவர் அமித்ஷா உட்பட ஆயிரக்கணக்கான பா.ஜ.கவினர் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் இறுதி ஊர்வலத்தில் நான்கு கிலோமீற்றர் தொலைவு நடந்தே சென்றுள்ளனர்.

மரணமடைந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாய்க்கு ஜனாதிபதி,



பிரதமர், துணை ஜனாதிபதி, உள்துறை அமைச்சர், பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி உட்பட பலர் இரங்கல் தெரிவித்தனர். அவரது உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

டில்லி பா.ஜ.க. அலுவலகத்தில் பொது மக்கள் பார்வைக்காக நேற்று வாஜ்பாய் உடல் வைக்கப்பட்டது. அங்கும் வெளிநாட்டு தலைவர்கள் உட்பட பலர் அவருக்கு அஞ் சலி செலுத்தினர்.

இந்நிலையில், முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் உடல் கட்சி அலுவலகத்தில் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி முடிந்ததும், அங்கிருந்து பிற்பகல் 2 மணிக்கு வாஜ்பாயின் இறுதி ஊர்வலம் தொடங்கியது. அலங்கரிக்கப்பட்ட ராணுவ வாகனத்தில் வாஜ்பாயின் உடல் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது.

வாஜ்பாய் இறுதி ஊர்வலத்தில் பிரதமர் நரேந்திர மோடி, பா.ஜ.க தலைவர் அமித்ஷா மற்றும் ஆயிரக்கணக்கான பா.ஜ.கவினர் சுமார் நான்கு கிலோ மீற்றர் தொலைவு நடந்தே சென்று அவருக்கு அஞ்சலி செலுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் மாகாண எதிர்க்கட்சித் தலைவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

பொய்யை திரும்பத் திரும்பக் கூறின் அது மெய்யாகும் என்று சிலர் நம்பிச் செயற்படுவதுண்டு. அவ்வாறு செயற்பட்டவர்களில் குறிப்பிட்டுக் கூறக்கூடியவர்கள் அடொல்ப் ஹிட்லரும், அவரது பரப்புரை மந்திரி கோபெல்ஸும் ஆவர் . அவர்களின் அந்த நம்பிக்கை பிழை என்பதைச் சரித்திரம் நிரூபித்துள்ளது. அதேபோல்தான்வடக்கு முதலமைச்சர் மீண்டும் மீண்டும் பொய்யுரைப்பதன் மூலம் மக்களை நம்பவைக்கலாம் என்று கருதுகிறார் போலும்.

கடந்த 16ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையின் நிகழ்வொன்றில் உரையாற்றும் போது முதலமைச்சர் நல்லவர்களை திறனுடையவர்களை இங்கு விட்டுவைக்க மாட்டார்கள் போலத் தெரிகிறது. பளிக்கார என்ற ஒரு சிறந்த ஆளுநர் இங்கு இருந்தார். அவரை இங்கிருந்து ஒரு வருடத்தில் மாற்றி ஓர் அரசியல்வாதியைக் கொண்டு வந்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன் என்று கூறுவார்கள். முதலமைச்சரின் இவ்வுரை எனக்கு அவ் வாறே படுகின்றது. பளிக்கார ஆளுநராக 2015 ஜனவரி மாதத்தில் நியமனம் பெற்று வந்திருந்தார். முதலமைச்சரினால் பளிக்காரவுக்கு 2016 ஆரம்பத்தில் அனுப்பிய கடிதமொன்று மிகக் காரசாரமாக எழுதப்பட்டது மட்டுமல்ல, அந்தக் கடிதத்தில் "This amounts to cannibalism" என்ற வார்த்தைப் பிரயோகமும் அமைந்திருந்தது. இதனால் மிகவும் வேதனையடைந்த பளிக்கார தனது இராஜிநாமாவைக் கொடுத்து 2016 பெப்ரவரி மாதம் பதவியிலிருந்து விலகினார். "Cannibalism" என்பது தமது இனத்தின் மாமிசத்தினைத் தாமே உண்பதனைக் குறிப்பிடுவது ஆகும். இக்கடிதத்தொடர்பாடலின் பின் பள்ளிக்கார தனக்கு நெருங்கியவர்களுக்குக் கூறிய வார்த்தை "I am thoroughly heart. He is an educated person. I am also an educated. I know what he intended to do." பளிக்காரவுடன் நெருங்கிப் பழகியவர்கள் இதற்குச் சாட்சியாக இருக்கின்றார்கள்.

மேலும் முதலமைச்சர் தனது உரையில் அவரின் (தற்போதைய ஆளுநர்) நடவடிக்கைகள் எங்களைக் கோட்டு வரை கொண்டு சென்றுள்ளது எனவும் முதலமைச்சரால் அவருக்கு சென்ற வருடம் ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி அனுப்பப்பட்ட அமைச்சர் ஒருவர் பற்றிய தீர்மானம் இது வரையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளமை மொட்டைத் தலைக்கும் முழந்தாளிற்கும் முடிச்சுபோடும் கதையாக அமைந்துள்ளது.

முதலமைச்சரினால் டெனிஸ்வரனுக்கு முகவரியிடப்பட்டு 20.08.2017 இல் அனுப்பப்பட்ட கடிதத்தில் டெனிஸ்வரனை அவர் வகித்த அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குவதாகவும், அவரிடமிருக்கும் அலுவலக ஆவணங்கள் யாவற்றையும் அமைச்சின் செயலாளரிடம் கையளிக்குமாறும் எழுதிய கடிதம் செல்லுபடியற்றது என்றே மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவை விதித்துள்ளது. உண்மை நிலைமை இதுவாக இருக்க ஆளுநரினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாமையினாலேயே கோட்டு வரை சென்றுள்ளதெனக் கூறியிருக்கின்றமை முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கும் செயலாகும்.

முதலமைச்சர் தொடர்ச்சியாக இவ் விடயம் தொடர்பாக உண்மைக்குப் புறம்பாகவும், உண்மையைத் திரிபு படுத்தியும் கூறி வருகின்றமை மக்கள் விளக்கமில்லாதவர்கள், அவர்களுக்குத் திரும்பத் திரும்பப் பொய் உரைப்பதன் மூலம் அவர்களை நம்ப வைக்க முடியும் என்ற நம்பிக்கையிலா என்று எண்ணத் தோன்றுகின்றது – என்றுள்ளது. (ஐ)

## கீத் நொயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதியிடம் மூன்று மணித்தியாலங்கள் குற்றப்புலனாய்வுப்பிரிவினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

கொழும்பு விஜேராமவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இந்த விசாரணைகள் மூன்று மணித்தியாலங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த விசாரணையின் நிறைவில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே மஹிந்த மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐஉரடங்கிய குற்றபுலனாய்வுப் பிரிவினர் என்னிடம் விசாரணைகளை மேற்கொண்டனர். ஊடகவியலாளர் கீத் நொயர் தொடர்பில் விசாரிக்கப்பட்டது.

அந்தச் சம்பவம் தொடர்பில் தற்போது எனக்கு நினைவில் இல்லை. இவ்வாறான செயற்பாடுகள் அரசியல் தேவை கருதியே மேற்கொள்ளப்படுகின்றன.

அரசின் பழிவாங்கும் படலத்தின் ஓர் அங்கமே இதுவாகும். தற்போதைய சபாநாயகரே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். இவ்வாறான விசாரணைகளுக்கு முகம் கொடுப்பது தற்போது வாடிக்கையாகிவிட்டது.

கருஜயசூரிய எனக்கு இரவு 11.20 மணி அளவில் தொலைபேசி அழைப்பை எடுத்தார் என அவர்கள் தெரிவித்தனர். ஆனால் எனக்கு அது தொடர்பில் நினைவில்லை – என்றார். (ஐ)

## தெல்லிப்பழையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 21ஆம் திகதி இந்தக் காணி விடுவிக்கப்படவுள்ளதாக இராணுவம் அறிவித்துள்ளது.

51ஆவது படைப்பிரிவினால் பயன்படுத்தப்பட்ட காணிகளே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

22ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார் என இலங்கைக்கான ஜப்பான் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அவர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்த்தனவுடன் ஜப்பான் – இலங்கை பாது காப்பு தொடர்பான ஆலோசனைகளை நடத்தவுள்ளதுடன் இலங்கை அரசின் உயர் மட்டத் தலைவர்களையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

அத்துடன், கொழும்பிற்கு வெளியிலும் பயணங்களை மேற்கொள்ள அவர் திட்டமிட்டுள்ளார் என இலங்கைக்கான ஜப்பான்தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

ஜப்பானுக்கும், இலங்கைக்கும் இடையிலான 'விரிவான பங்களிப்பு' மேலும் வலுப்பெறுவதற்கு இந்த விஜயம் உறுதுணையாக அமையும் என ஜப்பானியத் தூதரகம் எதிர்பார்க்கின்றது.

ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சரொருவர் இலங்கைக்கான விஜயமொன்றை மேற் கொண்டமை இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மஹிந்தாவிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லாட்சி அரசு பதவியேற்று மூன்றாண்டுகள் பூர்த்தியாகும் சந்தர்ப்பத்தில் முன்னாள் ஜனாதிபதியிடம் விசாரணை செய்வது அரசியல் தந்திரம் என்று அந்த உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மினுவாங்கொட பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று உடுகம்பொல பிரதேச சபை கேட்போர் கூடத்தில் பிரதேச சபைத் தவிசாளரின் தலைமையில் இடம்பெற்றது.

பிரதேச சபைத் தவிசாளர் உட்பட உறுப்பினர்கள் கறுப்புப் பட்டி அணிந்துகொண்டு சபைக்கு வருகை தந்தனர்.

அரசியல் பழிவாங்கல் தவிர ரணில் – மைத்திரி அரசுக்குச் செய்வதற்கு வேறொன்றுமில்லை என்று மினுவாங்கொட பிரதேச சபைத் தவிசாளர் இதன்போது தெரிவித்தார். (ஐ)

## மஹிந்த மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தியது. அவர் மீது சேறு பூசுவதற்கே இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

கூட்டு எதிரணி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இலங்கை மன்றக்கல்லூரியில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்கள் நேரடியாக அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யவேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் அரசு தற்போது அடக்குமுறை, மோசடி மற்றும் மக்களின் உரிமைகளை எப்போதுமில்லாதவாறு மீறிச் செயற்படுகிறது.

குற்றப்புலனாய்வுப் பிரிவு இரண்டரை மணி நேரம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவிடம் விசாரணை நடத்தியது. இது சேறு பூசும் நடவடிக்கையாகும். குற்றப்புலனாய்வுப் பிரிவு அரசாசின் கையாளாகச் செயற்படுகிறது. குறுகிய அரசியல் நோக்கத்துக்காக ராஜபக்ஷ குடும்பத்தினர் மற்றும் கூட்டு எதிரணி உறுப்பினர்கள் தொடர்பில் அரசு அச்சமடைந்துள்ளது. அதனாலேயே அவர்களுக்கு எதிராக இவ்வாறான கெடுபிடிகளை முன்னெடுத்து வருகிறது.

சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மூலம் நாட்டுக்கு பாரிய பாதிப்பு ஏற்படக்கூடியது. எனினும் அந்த உடன்படிக்கை இறுதியானது இல்லையெனவும் தேவைப்படுமிடத்து ஒரு வருடத்தின் பின்னர் அதில் திருத்தம் மேற்கொள்ள முடியும் என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். அவரின் கருத்து யதார்த்தத்திற்குப் புறம்பானதாகும். சிங்கப்பூரின் அனுமதியின்றி அந்த உடன்படிக்கையில் திருத்தம் மேற்கொள்ள முடியாது.

மேலும் மக்களின் வாக்களிக்கும் உரிமையை அரசு இல்லாது செய்துள்ளது. எந்தவொரு தேர்தலையும் உரிய காலப் பிரிவில் நடத்துவதாக இல்லை. ஜனநாயகத்தின் அடிப்படைத்தத்துவங்களில் ஒன்றான வாக்களிக்கும் உரிமையை இல்லாது செய்வதை ஒருபோதும் அங்கீகரிக்க முடியாது. ஆகவே தான் நல்லாட்சி அரசு வீடு செல்ல வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளதாக நாம் தெரிவிக்கிறோம் – என்றார். (ஐ)

## தமிழ்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் தி.கிந்துஜன், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு எதிராக உள்ள வீதியில் அமைந்துள்ள அலுவலகமே இவ்வாறு உடைக்கப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி செஞ்சோலையில் உயிரிழந்த மாணவர்களின் 12 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் நினைவு கூரப்பட்டது.

நேற்று முன் தினம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் யாரும் இல்லாதவேளை அங்கு சென்ற 8 படையினர் கதவை உடைத்து உட்புகுந்ததுடன் சேதப்படுத்தியுள்ளனர் எனவும், இதனை அயலவர்கள் நேரில் கண்டு வீட்டின் உரிமையாளருக்குத் தெரியப்படுத்தினர் என்றும் மாவட்ட அமைப்பாளர் தெரிவித்தார்.

அலுவலகம் தாக்கப்பட்டமை தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றீடாக உக்கக் கூடிய வகையிலான சில உபயோகப் பொருள்கள் யாழ். மாநகர சபையால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. வியாபார நிலையங்களில் உள்ள பொலித்தீன் பொருள்கள் பறிமுதல் செய்யப்படும் என்று யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட் தலைமையில் நேற்று இடம் பெற்ற சிறப்புக் கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த நடவடிக்கை இறுக்கமாகக் கடைப்பிடிக்கப் படுவதுடன், சிறப்புப் பொலிஸ் குழு ஒன்று கண்காணிப்பில் ஈடுபடுத்தப்படும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பில் யாழ். மாநகர சபையின் உறுப்பினர் வரதராசா பார்த்திபன் தெரிவித்தவை வருமாறு:

நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழா தொடர்பில் யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் தலைமையில் நேற்றுச் சிறப்புக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டன. அதில் நல்லூர் ஆலயத் திருவிழாக் காலத்தில் ஆலயச் சூழலில் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடை செய்வது என்று முடிவு எடுக்கப்பட்டது.

பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டது மட்டுமன்றி, அதற்கு மாற்றீடாக பல உபயோகப் பொருள்கள் யாழ். மாநகர சபையால் அறிமுகப்படுத்தப் பட்டன. அதனால் பொலித்தீன் பாவனையைத் தடை செய்யும் முடிவை இறுக்கமாகப் பின்பற்றுவது என இணக்கம் காணப்பட்டது.

எனவே நல்லூர் ஆலயச் சூழலில் உள்ள அனைத்து வியாபார நிலையங்களிலும் காணப்படும் பொலித்தீன் உபயோகப் பொருள்கள் பறிமுதல் செய்யப் படும்.

இந்த நடவடிக்கையைக் கண்காணிப்பதற்கும் நடைமுறைப் படுத்துவதற்கும் 5 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொண்ட சிறப்புப் பொலிஸ் குழுவை கடமைக்கு அமர்த்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது – என்றார். (ஐ-7)

## எல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றத்தில் சமர்ப்பிக்கப்படுமென சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் அமைச்சருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதென அமைச்சர் மேலும் கூறினார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

அறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பில் விவாதிக்கப்பட்ட பின்னர், அதனை நிராகரிக்கவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியும். அதன் பின்னரே மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையில் நடத்துவதென்பது தொடர்பில் தீர்மானிக்க முடியும்.

மாகாண சபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவதற்கு சுதந்திரக் கட்சி கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கிறது. அந்தத் தேர்தல், புதிய தொகுதி மற்றும் விகிதாசார முறைமைகளின் கீழ், விரைவில் நடத்தப்படவேண்டும் என்பதே எங்கள் கட்சியின் எதிர்பார்ப்பாகும் – என்றார். (ஐ)

## செப்ரெம்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிலிருந்து நல்லாட்சி வீடு செல்லும் அத்தியாயம் ஆரம்பிக்கவுள்ளது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் கூட்டு எதிரணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்தன.

கூட்டு எதிரணி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நல்லாட்சி அரசின் மூன்றரை வருட ஆட்சியில் நாடு அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. ஆகவே இனியும் இந்த அரசு நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு இடமளிக்க முடியாது. நாட்டில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்குப் பதிலாக ஜனநாயக விரோதச் செயற்பாடுகளை முன்னெடுத்து எதிர்க்கருத்துள்ள அரசியல் தரப்பினரைத் தண்டிக்கின்றனர்.

அரசின் பொருளாதாரக் கொள்கைத் திட்டத்தால் மக்கள் நாளுக்கு நாள் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எப்போதுமில்லாதவாறு வரிச்சுமை ஏற்றப்பட்டுள்ளது. ஆட்சியை முன்னெடுத்துச் செல்ல முடியாததால் தேசிய சொத்துகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர். மேலும் சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையைக் கொண்டு வந்து பூதாகரமான நிலைவரத்தை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஆகவேதான் நல்லாட்சி அரசுக்கு எதிராக எதிர்வரும் ஐந்தாம் திகதி கொழும்பில் பாரிய எதிர்ப்புப் பேரணியொன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளோம். கொழும்பில் அணி திரளும் மக்கள் அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். எதிர்ப்புப் பேரணி வரலாற்றில் கூடுதலான மக்கள் கலந்துகொண்ட பேரணியாக இது அமையவுள்ளது. எனவே அந்தப் பேரணியுடன் அரசு ஆட்டம் காண்பதுடன் அதிலிருந்து வீட்டுக்குச் செல்லும் அத்தியாயம் ஆரம்பமாகவுள்ளது – என்றார். (ஐ)

# கோஹ்லியை நம்பி இந்திய அணி இல்லை




இந்திய அணி விராட் கோஹ்லியை மாத்திரமே நம்பியுள்ளது என்ற நிலைப்பாடு நியாயமற்றது என இலங்கை அணியின் முன்னாள் வீரர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

விராட் கோஹ்லி கடந்த பல வருடங்களாக சிறப்பாக துடுப்பாடி வருகிறார். அவரது ஆட்டத்திறன் குறித்து பெருமிதம் கொள்ள முடியும்.

ஆனால் அவரை நம்பியே இந்திய அணி செயற்படுகிறது என்ற நிலைப்பாடு நியாயமற்றது. இந்தியாவின் ஏனைய துடுப்பாட்ட வீரர்களும் அதிக திறமைசாலிகளாக இருக்கின்றனர்.

குறிப்பாக புஜாரா மற்றும் ரஹானே ஆகியோர் அதிக திறனை வெளிப்படுத்தக் கூடியவர்கள். அவர்கள் வெளிநாடுகளில் சிறப்பாக செயற்பட்டு வந்துள்ளனர் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.



## தென்கொரியா உதைபந்து அணி பயிற்சியாளராக போல் பென்டோ

தென்கொரியா தேசிய உதைபந்து அணியின் பயிற்சியாளராக, போர்த்துக்கல் உதைபந்து அணியின் முன்னாள் வீரரான போல் பென்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

சியோலில் அமைந்துள்ள தென்கொரியா தேசிய உதைபந்து அணியின் தலைமையகம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

போர்த்துக்கல் உதைபந்து அணியின் முன்னாள் பயிற்சியாளராக இருந்த, 49வயதான போல் பென்டோ, நான்கு ஆண்டுகள் வரை, அதாவது கட்டாரில் எதிர்வரும் 2022ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ண உதைபந்து தொடர் வரை அணியுடன் இணைந்திருப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பயிற்சியாளராகப் பொறுப்பேற்றுள்ள போல் பென்டோ, அணிக்கு சிறந்ததொரு பங்களிப்பை வழங்குவார் என தாம் உறுதியாக நம்புவதாக தென்கொரியா தேசிய உதைபந்து சங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

கடந்த 1992ஆம் ஆண்டு தொடக்கம் 2002ஆம் ஆண்டு வரை, போர்த்துக்கல் உதைபந்து அணிக்காக போல் பென்டோ, 35 போட்டிகளில் விளையாடியுள்ளார். அவர் தற்காப்பு மத்திய கள வீரராக அணியில் இடம்பெற்றிருந்தார்.

இதேவேளை, உதைபந்து துறையில் வளர்ந்து வரும் உதைபந்து அணியாக உலகளவில் இனங்காணப்பட்டுள்ள தென்கொரியா, நடைபெற்று முடிந்த உலகக்கிண்ண தொடரில் சிறப்பாக விளையாடியது.

ரஷ்யாவில் நடைபெற்ற உலகக் கிண்ண தொடரில், எவ் பிரிவில் இடம் பெற்றிருந்த தென்கொரியா தான் விளையாடிய மூன்று போட்டிகளில் ஒரு போட்டியில் வெற்றிபெற்றது. ஏனைய இரண்டு போட்டிகளில் தோல்வியடைந்தாலும் அந்த இரண்டு போட்டிகளிலும் எதிரணிகளுக்கு கடும் நெருக்கடி கொடுத்தது.

முக்கியமாக நடப்பு சம்பியன் பட்டத்துடன் களமிறங்கிய ஜேர்மனி அணியை 2:0 என தோற்கடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்து – இந்தியா 3ஆவது டெஸ்ட் இன்று

கிரிக்கெட் இரசிகர்கள் மனதில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இங்கிலாந்து மற்றும் இந்தியா அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி இன்று நொட்டிங்ஹாம் டிரென்ட் பிரிஜ் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த போட்டி இரு அணிகளுக்குமே முக்கியமானதொரு போட்டியாக அமையவுள்ளது என்பதில் எவ்வித மாற்று கருத்துமே இல்லை.

காரணம், ஐந்து போட்டிகள் கொண்ட இந்த டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி முதல் டெஸ்ட்டை 31 ஓட்டங்கள் வித்தியாசத்திலும், இரண்டாவது டெஸ்ட்டை இன்னிங்ஸ் மற்றும் 159 ஓட்டங்களால் வெற்றிக்கொண்டு, தொடரில் 2:0 என இங்கிலாந்து முன்னிலை வகிக்கின்றது.

எனவே மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றால் டெஸ்ட் தொடரை வென்றுவிடும். இந்தியா அணி வென்றால் தொடரைத்தக்கவைக்கும்.

ஆகவே இன்று ஆரம்பமாகும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இரு அணிகளும் வெற்றிக்காக கடுமையாக போராடும்.

இப்போட்டிக்காக தற்போது இரு அணி வீரர்களும் தீவிர பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இங்கிலாந்து அணியை பொறுத்தவரை அந்த அணி பலமான அணியாகவே பார்க்கப்படுகின்றது. அந்த அணியில் இடம்பெற்றுள்ள அனைத்து வீரர்களும் சிறந்த பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் பங்கேற்காத சகலதுறை வீரரான பென் ஸ்டோக்ஸ் மீண்டும் அணியில் இணைந்துள்ளார். அவரும் தற்போது வலைப்பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

எனினும், அவர் இன்று ஆரம்பமாகும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் களமிறங்குவாரா என்பது குறித்து உறுதியான தகவல்கள் இல்லை.

மேலும், நொட்டிங்ஹாம் டிரென்ட் பிரிஜ் மைதானத்தில் அரசனாக திகழும் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன், மூன்றாவது டெஸ்ட் போட்டியில் ஆதிக்கம் செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவர், இந்த மைதானத்தில் கடந்த 2003ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவிற்கு எதிராக 5 விக்கெட்டுகளும், 2008ஆம் ஆண்டு நியூசிலாந்திற்கு எதிராக 7 விக்கெட்டுகளும், 2010ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக 11 விக்கெட்டுக்களும், 2013ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவிற்கு எதிராக 10 விக்கெட்டுகளும், 2017ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவிற்கு எதிராக 5 விக்கெட்டுகளும் என 9டெஸ்ட் போட்டிகளில் விளையாடி மொத்தம் 60 விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளார்.

கடந்த இந்திய அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் கூட, முதல் இன்னிங்சில் 5 விக்கெட்டுக்களும், இரண்டாவது இன்னிங்சில் 4 விக்கெட்டுக்களும் வீழ்த்தி சிறந்த நிலையை நிரூபித்திருந்தார்.

இதுதவிர அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய இங்கிலாந்து வீரர் என்ற பெருமையை பெற்றுள்ள ஜேம்ஸ் அண்டர்சன், இதுவரை 553 விக்கெட்டுக்கள் கைப்பற்றியுள்ளார். இன்னும் 11 விக்கெட்டுக்கள் வீழ்த்தினால் டெஸ்ட் வரலாற்றில் அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய வேகப்பந்து வீச்சாளர் என்ற பெருமையை பெறுவார். அவுஸ்ரேலிய வேகப்பந்து வீச்சாளர் கிளென் மெக்ராத் 563 விக்கெட்டுக்களுடன் முதல் இடத்தில் உள்ளார்.

இந்தியா அணியை பொறுத்தவரை, சிறந்த வீரர்கள் அணியில் இருந்தாலும் அவர்களால் இந்த டெஸ்ட் தொடரில் சிறப்பாகச் செயற்பட முடியவில்லை.

உலகின் முதல்நிலை அணியான இந்தியா அணி மீது, கடந்த இரண்டு போட்டிகளின் பின்னர் கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இங்கிலாந்து ஆடுகளம், தட்பவெப்பநிலை ஆகியவற்றை இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்கள் சரியாக கணிக்க தெரியாமல் திணறுவதாகவும் பரவலாக பேசப்படுகின்றது.

அதுமட்டுமல்லாமல் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான முரளி விஜய், லோகேஷ் ராகுல், தவான் ஆகியோர் தென்னாபிரிக்கா தொடரில் இருந்தே தடுமாற்றத்தைச் சந்தித்து வருகின்றனர். இதனாலும் இந்திய அணி கடுமையான பின்னடைவைச் சந்தித்துள்ளது.

ஒருநாள் தொடரில் சிறப்பாக விளையாடியதன் காரணமாக டெஸ்ட் தொடருக்குள் உள்வாங்கப்பட்ட தினேஷ் கார்த்திக்கும் பெரிதாக சோபிக்கவில்லை. இதனால் அவரை அணியிலிருந்து நீக்கி ரிஷப் பந்தை மூன்றாவது டெஸ்ட் போட்டியில் உள்ளெடுக்க இந்திய அணி நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

அதேபோல கைவிரல் உபாதை காரணமாக நீண்டநாள் ஓய்வில் இருந்த வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரிட் பும்ராவும் உடற்தகுதியை எட்டியுள்ள நிலையில் அவரும் அணிக்குள் உள்வாங்கப்படவுள்ளார்.

எதுஎவ்வாறாயினும் தொடரை தீர்மானிக்கும் மூன்றாவது டெஸ்ட் போட்டி, இரசிகர்களுக்கு மிகவும் விறுவிறுப்பை தரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

## ஆசிய விளையாட்டுப் போட்டி இன்று கோலாகல ஆரம்பம்




4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டிகள், இன்று இந்தோனேசியாவில் கோலகலமாக ஆரம்பமாகின்றன.

இந்நிலையில் விழாக் கோலம் பூண்டுள்ள இந்தோனேசியா, தங்கள் நாட்டுக்கு வரும் உலக நாட்டு வீரர், வீராங்கனைகளை வரவேற்கத் தயாராகி விட்டது.

தற்போது, விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ள இடங்களில் அதற்கான ஆயத்த பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக ஆசிய விளையாட்டுப் போட்டிகள், நடைபெறவுள்ள இடங்கள், சூழவுள்ள இடங்கள் என அனைத்து இடங்களிலும் துப்பரவுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 1951ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட ஆசிய விளையாட்டுப் போட்டிகள், இந்தோனேசியாவில் இரண்டாவது முறையாக நடைபெறுகின்றது. இறுதியாக 1962ஆம் ஆண்டு இந்தோனேசியாவில் நடைபெற்றது.

சுமார், 56 ஆண்டுகளுக்கு பிறகு ஆசிய விளையாட்டுப் போட்டிகள், இந்தோனேசியாவில் நடைபெறவுள்ளமையால் அந்நாட்டு மக்கள் இந்த போட்டிகளைகாண ஆவலுடன் காத்துக்கொண்டு இருக்கின்றனர்.

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இன்று முதல் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை தலைநகர் ஜகார்த்தா மற்றும் பாலெம்பேங் ஆகிய இடங்களில் நடைபெறுகின்றன. ஆசிய விளையாட்டுப் போட்டி முதல் முறையாக 2 நகரங்களில் நடத்தப்படுகிறது.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் சுமார் 17000 வீரர், வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர். அத்தோடு குறித்த போட்டிகளை ஒரு லட்சத்துக்கும் அதிகமான பார்வையாளர்கள் கண்டுகளிக்க வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக இந்த ஆசியப் போட்டிகளில் பலரினதும் எதிர்பார்ப்புக்குரிய போட்டியான உதைபந்து தொடரில், 24 அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.

இதில், ஆண்களுக்கான போட்டிகள் மேற்கு ஜாவா மாகாணத்தின் 4 விளையாட்டரங்குகளிலும், பெண்களுக்கான போட்டிகள் சுமத்திராவிலுள்ள பாலெம்பேங் விளையாட்டரங்கிலும் நடைபெறவுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir



# சிறந்த அரசியல் தலைவரை இழந்து நிற்கின்றது இந்தியா

## வாஜ்பாய் மறைவுக்கு சம்பந்தன் இரங்கல்



இன்று இந்தியா தனது மிகச் சிறந்த அரசியல் தலைவர்களில் ஒருவரும் சிறந்த அறிவாளியுமான முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாஜை இழந்துள்ளது.

இவ்வாறு இந்தியாவின் முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார் எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன்.

முன்னாள் பாரதப் பிரதமரும் பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவருமான வாஜ்பாய் ஒரு மிகச் சிறந்த தலைவர் மட்டுமல்லாது அவரது தொலைநோக்குத் தலைமைத்துவத்தின் கீழ் இந்தியா அநேக சாதனைகளை நிலைநாட்டுவதற்கும் வழிவகுத்தார்.

தனது நேர்மையான தாழ்மையுடன் கூடிய தலைமைத்துவத்தினால் இந்தியாவை வழிநடத்திய வாஜ்பாய் உலகம் முழுவதுமுள்ள ஆயிரக்கணக்கான மக்களினால் நேசிக்கப்பட்ட மதிக்கப்பட்ட ஒரு தலைவராவார்.

மூன்று முறை இந்தியப் பிரதமராகப் பதவி வகித்த வாஜ்பாய் மிகச் சிறந்த பேச்சாளர் மட்டுமல்லாது நல்ல நகைச் சுவை உணர்வுமிகுந்த ஒருவருமாவார். இந்திய நாடாளுமன்றத்திலும் வெளியிலும் அவர் ஆற்றிய உரைகள் என்றைக்கும் நினைவிலிருக்கும்.

இந்திய மக்களுக்கு அவர் ஆற்றிய தன்னலமற்ற சேவையைப் பாராட்டி இந்திய அரசினால் பாரதரத்னா மற்றும் பத்ம விபூண் விருதுகள் அவருக்கு வழங்கப்பட்டன.

இலங்கை வாழ் தமிழ் மக்களின் சார்பில், அவரது குடும்பத்தினருக்கும், பாரதிய ஜனதாக் கட்சிக்கும், இந்திய அரசுக்கும் இந்திய மக்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் – என்றார். (ஐ)

# கடனை வசூலிக்க இரவில் வரும் நிதி நிறுவனங்களின் ஊழியர்கள்

## வவுனியாவில் பெண்கள் கூடி எதிர்ப்பு

வவுனியா, ஓக.18

இரவு வேளைகளில் வீடுகளுக்கு நுண்நிதி நிறுவனப் பணியாளர்கள் வருவதற்குத் தடை விதிக்குமாறும், பெற்றுக்கொண்ட கடன் பணத்தைச் செலுத்துவதற்கான வழிமுறைகள் தற்போது காணப்படாமையால் தமக்கான நிவாரணங்களை வழங்குமாறும் கோரி வவுனியா, கோவில்குளம், கோவில் புதுக்குளம் பகுதிகளிலுள்ள பெண்கள் வீதியில் ஒன்றுகூடினர்.



கோவில்குளம், கோவில்புதுக்குளம் பகுதிகளுக்குச் செல்லும் நுண்நிதி நிறுவனப்பணியாளர்கள் பணத்தை வசூலிப்பதற்கு நீண்ட நேரமாக வீடுகளின் முன்னால் காத்திருந்து வருகின்றனர் என்றும், இதனால் கடன் பெற்றுக் கொண்ட குடும்பப் பெண்கள் தலைமறைவாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இன்னும் சிலர் வீடுகளுக்குள் ஒழிந்துகொண்டு வெளியே சென்றுவிட்டதாகத் தெரிவித்து வருகின்றனர் எனவும் இவர்கள் கூறினர்.

கடன்பெற்றுக்கொண்ட நிறுவனங்களின் கெடுபிடிகள் நாளுக்கு நாள் அதிகரித்துச்செல்கின்றன எனவும், நேற்று முன்தினம்ஒருநுண்நிதிநிறுவனத்தின்பணியாளர்கள்பெண் ஒருவரை அச்சுறுத்தியுள்ளனர் என்றும், பணத்தை வசூலிப்பதற்காக இரவு 8 மணிக்கு வீடுகளுக்கு அவர்கள்வருகின்றனர்என்றும், அதிலிருந்து தம்மை விடுவிப்பதற்குஅரசுஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் வீதியில் கூடிய பெண்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ-100)

# ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல ரஷ்யாவுடன் மஹிந்த ஒப்பந்தம்

## அசாத் சாலி குற்றச்சாட்டு



2020 ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ ரஷ்யாவுடன் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளார் எனத் தேசிய ஐக்கிய முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

அந்தக் கட்சியின் தலைவரும், கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான அசாத் சாலி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில் –

பிணை முறி மோசடி தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுக் குற்றவாளிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனினும் மஹிந்தவின் ஆட்சியில் இடம்பெற்றபிணைமுறிமோசடிகள் தொடர்பில் சரியான முறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. எனவே அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

நாமல் இந்த வருடத்தில் மாத்திரம் மூன்று தடவைகள்ரஷ்யாவுக்குசென்றுள்ளார். இவர் 2020 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற ரஷ்யாவுடன் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளார் – என்றார். (ஐ)

# சப்ரகமுவவின் பதில் ஆளுநராக ரெஜினோல்ட் குரே



கொழும்பு, ஓக.18

வடக்குமாகாணஆளுநர் ரெஜினோல்ட் குரே சப்ரகமுவ மாகாண பதில் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் நிலுக்கா ஏக்கநாயக்க உத்தியோகபூர்வ பயணம் ஒன்றை மேற்கொண்டு இத்தாலி சென்றுள்ளமையால் வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே பதில் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# இரு இறங்குதுறைகள் பூநகரியில் புனரமைப்பு

கிளிநொச்சி, ஓக.18

பூநகரிப் பிரதேசத்தில் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைச்சின் ஊடாக இரண்டு இறங்கு துறைகள் 55 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி பூநகரிப்பிரதேசத்திற்குட்பட்ட பகுதிகளில் காணப்படுகின்ற மீன்பிடி இறங்குதுறைகளைப் புனரமைத்துத் தருமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் பூநகரிப் பிரதேசத்திற்குட்பட்ட இரணைமாதா நகர் இறங்குதுறை மற்றும் வளர்மதி இறங்குதுறை என்பன தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைச்சின் நிதியொதுக்கீட்டின் கீழ் 55 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படுகின்றன.

# நிரந்தமான வீடுகள் இல்லாமல் மாந்தையில் 899 குடும்பங்கள்

மன்னார், ஓக.18

மாந்தை கிழக்குப்பிரதேசத்தில் மீள்குடியேறிய ஆயிரத்து 667 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டபோதும் 899 குடும்பங்களுக்கான நிரந்தர வீட்டுத் தேவைகள் காணப்படுகின்றன பிரதேச செயலகத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகளிலும் மூவாயிரத்து 83 குடும்பங்கள் மீள் குடியேறியுள்ளன.

இந்நிலையில் ஆயிரத்து 667 புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டதுடன், பகுதியளவில் சேதமடைந்த 575 வீடுகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

இவைதவிர, இரண்டாயிரத்து 96 மலசலகூடங்கள், 105 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் 208 கிணறுகளும் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஆயிரத்து 709 குடும்பங்ளுக்கு வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

899 குடும்பங்களுக்கான புதிய வீடுகள், 75 குடும்பங்களுக்கான பகுதித் திருத்த வீடுகள், 50 மலசலகூடங்கள், 250 கிணறுகள், 270 திருத்தப்படவேண்டிய கிணறுகள் போன்ற தேவைப்பாடுகள் அங்கு காணப்படுகின்றமையுடன் ஆயித்து 100 குடும்பங்களுக்கா வாழ்வாதார உதவிகளும் தேவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்.,மன்னார் மாவட்டங்களில் 1,800 பனைகள் தீயால் அழிவு!

கொழும்பு, ஓக.18

யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரில் தீ விபத்துக் காரணமாக 3 நாள்களுக்குள் சுமார் ஆயிரத்து 800 பனை மரங்கள் அழிவடைந்துள்ளன என்று பனை அபிவிருத்திச் சபைக் கள உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் சில கிராமங்களில் முயல்கள், முள்ளம்பன்றிகள் உள்ளிட்ட காட்டு மிருகங்களை வேட்டையாடுபவர்கள் பனங் கூடல்களுக்குத் தீ வைத்துள்ளனர் என பனை அபிவிருத்திச் சபை கள உத்தியோகத்தர்களின் தகவலின் அடிப்படையில் கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதனாலேயே பனை மரங்கள் ஆயிரக்கணக்கில் அழிவடைந்துள்ளன என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணம், தெல்லிப்பழைப் பகுதியிலுள்ள பனங்கூடலில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்தின் போது, இராணுவத்தினரும் யாழ். மாநகர சபை தீயணைப்புப் பிரிவினரும் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இருப்பினும், அங்கு 500இற்கும் மேற்பட்ட பனை மரங்கள் அழிவடைந்தன என்று மக்கள் கூறுகின்றனர்.

மன்னார் பேசாலை மற்றும் முசலிப் பகுதிகளில் பனங் கூடல்களில் ஏற்பட்ட தீயைக் கட்டுப்படுத்தத் தாமதமடைந்ததால், அங்கு ஆயிரத்து 200இற்கும் அதிகமான பனை மரங்கள் அழிவடைந்துள்ளன என்று பனை அபிவிருத்திச் சபை கள உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)


உ
அம்பாள் துணை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை
திருமஞ்சத் திருவிழா [ஆறாம் நாள்]



காலம்: 18.08.2018 சனிக்கிழமை மாலை 6.00 மணி
அனைவரும் கலந்துகொண்டு
அம்பாளின் திருவருளைப்
பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.
விழா உபயகாரர்
நிர்வாக சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.08.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.